# கொன்றாலும் குற்றமில்லை!



ராஜேஷ்குமார்

# கொன்றாலும் குற்றமில்லை!

ராஜேஷ்குமார்

## 1



மண்ணானால் மரமாக கண்ணானால் இமையாக மட்டுமல்ல ராமன்கள் என நம்பிய நீங்கள் ராவணன்கள் ஆனால் சிதையாக கண்ணீர் சிந்தமாட்டோம். டைனமைட்களாகவும் மாறுவோம்.

பச்சைக் கம்பளம் விரித்த மாதிரி விஸ்தாரமாகப் பரவியிருந்த லானின் மத்தியில் நாற்காலி போட்டு அமர்ந்திருந்தார்கள் சிதம்பரநாதனும், இளங்கோவும்.

இரண்டு பேருமே நகரின் முன்னணி லாயர்கள்.. கறுப்புக் கோட்டை மாட்டிக் கொண்டு கோர்ட்டுக்குள் நுழைந்தால் சிங்கமாய் கர்ஜிப்பவர்கள். லட்சங்களில்

கட்டணம் வாங்குபவர்கள்.

பணியாள் ஒருவன் ஆவி பறக்கும் டீ கோப்பைகளை பவ்யமாய் நீட்டிவிட்டுப் போனான்.

''சாப்பிடுங்க இளங்கோ...'' என்றார் சிதம்பரநாதன்.

இளங்கோ மெதுவாய், டீயை உறிஞ்சிக் கொண்டே சொன்னார்.

''இன்னிக்கு கோர்ட் கேம்ப்பஸ் பூராவும் உங்களைப் பத்தின பேச்சுத்தான் மிஸ்டர் சிதம்பரநாதன்...''

''இஸிட்...?''

''ஆமா... இந்த ஆளால மட்டும் எப்படி இவ்வளவு அழகா ஆர்க்யூ பண்ணி கேஸில் வின் பண்ண முடியுதுன்னு சில பேர் பாராட்டறாங்க... சிலபேர் பொறாமையோட பெருமூச்சு விடறாங்க...''

''ஆதாரங்களையும், சாட்சிகளையும் சரியா திரட்டினா தன்னால ஆர்க்யூமென்ட் ஸ்ட்ராங்கா அமைஞ்சிடும்...''

''சொல்ற அளவுக்கு இது சுலபம் இல்லையே... அதிலும் இந்த ஹை டெக் கம்ப்யூட்டர் கொள்ளையில் ஆதாரம் திரட்டறது சாதாரண காரியம் இல்லை... கம்ப்யூட்டர் புரோக்ராமில் சில்மிஷம் பண்ணி பாங்க் பணத்தை கொள்ளை அடிச்சிருக்கான்... ஆள் யாருன்னு தெரிஞ்சாலும்... கோர்ட்ல நிரூபிக்கிறது மலையைப் புரட்டற வேலை... அந்த வேலையை நீங்க அநாயசமா பண்ணிட்டீங்க...''

சிதம்பரநாதன் தன்னடக்கத்தோடு புன்னகைத்தார்.

''உங்க பாராட்டுக்கு நன்றி இளங்கோ...''

''அடுத்து நீங்க டீல் பண்ணப் போற கேஸ் என்ன...?''

''என்னோட ஆத்ம திருப்திக்காக ஒரு கேஸை எடுத்து டீல் பண்ணலாம்னு இருக்கேன்...''

''வாட் டூ யூ மீன்...?''

''அந்த கேஸ்க்காக ஒரு ரூபாய்கூட பீஸ் வாங்கறதில்லைன்னும் முடிவு செஞ்சிருக்கேன்...''



இளங்கோ திகைப்புடன் நிமிர்ந்தார்.

''என்ன ஸார் சொல்றீங்க...? உங்களோட ஒவ்வொரு நாள் உழைப்பும் சில லட்சங்கள் சம்பாதிக்கத் தரக்கூடியது... ஃபீஸ் வாங்காம வழக்கில் ஆஜராகப் போறீங்களா...?''

''நான்தான் சொல்லிட்டேனே... இந்த கேஸ் என்னோட ஆத்ம திருப்திக்காகன்னு...''

''என்ன கேஸ் அது...? பார்ட்டி யாரு...?''

''ஒரு பரபரப்பான மர்டர் கேஸ்...''

சொல்லிக் கொண்டே பிரம்பு டீபாயின்மேல் கிடந்த வாரப் பத்திரிகையை எடுத்துப் புரட்டி ஒரு பக்கத்தைக் காண்பித்தார் சிதம்பரநாதன்.

''இந்த கேஸைத்தான் நான் ஹேண்டில் பண்ணலாம்னு நினைச்சிருந்தேன்...''

அந்த இன்வெஸ்டிகேட்டிங் பத்திரிகையில் வெளியாகி இருந்த கவரேஜைப் பார்த்து இளங்கோ மெலிதாக அதிர்ந்தார்.

''புருஷன் வீட்டில் நடந்த கொடுமைகள் தாங்காம மாமனார், மாமியார், கணவன் மூணு பேரையுமே கதறக் கதற வெட்டிக் கொலை செஞ்சாளே ஒரு பொண்ணு... அந்த கேஸிலா ஆஜராகப் போறீங்க...?''

''ஆமா...''

''யாருக்காக வாதாடப் போறீங்க...?''

''கொலை செஞ்சதா குற்றம் சாட்டப்பட்டிருக்கற அந்தப் பொண்ணுக்காகத்தான் நான் வாதாடப் போறேன்...''

இளங்கோவுக்கு இன்னும் அதிர்ச்சி விலகவில்லை.

''ஸார்... நீங்க நல்லா யோசிச்சுத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கீங்களா...?''

''அதிலென்ன சந்தேகம்...? யோசிக்காம எந்தக் காரியத்தையும் நான் கையில் எடுத்ததே இல்லை...''

''பார்ட்டி கிட்டே பேசிட்டீங்களா...?''

''இன்னும் இல்லை...''

''அந்தப் பொண்ணுக்காக வாதாடலாம்ன்னு ஜஸ்ட் நீங்க முடிவு எடுத்து இருக்கீங்க... அவ்வளவுதானே...?''

''ஆமா...''

''உங்க முடிவை மாத்திக்கங்க ஸார்...''

''ஏன்...?''

''சிட்டியில் நம்பர் ஒன் க்ரிமினல் லாயர்ங்கற பேரும் புகழும் இன்னிக்கு தேதி வரைக்கும் உங்களுக்கு இருக்கு... நீங்க ஒரு கேஸைத் தொட்டா வெற்றி உங்களுக்குத்தான்ங்கற அபிப்ராயம் எல்லார்க்குமே இருக்கு... உங்களுக்கு இருக்கற நல்ல பேரை நீங்களே கெடுத்துக்காதீங்க...''

''ஏன் அப்படிச் சொல்றீங்க...?''

''நிஜத்தைத்தான் ஸார் நான் சொல்றேன்... ஆத்ம திருப்தி அது இதுன்னு சொல்லி ஃபீஸ் கூட வாங்கிக்காம உங்க தலைல நீங்களே மண்ணை அள்ளிப் போட்டுக்காதீங்க... இது ஒரு ஆகாவழி கேஸ்...''

''இது ஆகாவழி வழக்குன்னு எதனால சொல்றீங்க...?''

''இந்த கவரேஜைப் படிச்சாலே போதும்... ஒரு தேங்காய் மூடி வக்கீல்கூட... 'அய்யா... சாமி... ஆளைவிடுங்க... எனக்கு இந்த கேஸ் வேண்டாம்...'ன்னு பெரிசா ஒரு கும்பிடு போட்டு ஒதுங்கிப் போயிடுவான்... அப்படிப்பட்ட கேஸை நீங்க வலியப் போய் எடுத்துக்கறேன்னு சொல்றீங்க...''

நிஜமான அக்கறையோடு பதட்டப்படும் இளங்கோவின் முகத்தை ரசித்துக் கொண்டே புன்னகைத்தார் சிதம்பரநாதன்.

''கொலைக் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் அந்தப் பொண்ணு சௌம்யாவுக்காக நான் வாதாடினால்... எனக்குத் தோல்விதான் கிடைக்கும்ன்னு சொல்றீங்களா...?''



''நூத்தியொரு சதவீதம் உறுதியோடு என்னால சொல்ல முடியும்... தி கிரேட் லாயர் சிதம்பரநாதன் முதல் முறையா ஒரு தோல்வியைச் சந்திக்க வேண்டி வரும்...''

சிதம்பரநாதன் பத்திரிகையை இளங்கோவின் அருகே நகர்த்தி வைத்து அதிலிருந்த போட்டோவைத் தொட்டுக் காட்டினார்.

''இந்தப் பொண்ணு சௌம்யாவின் போட்டோவைப் பாருங்க இளங்கோ... முகத்தில் எவ்வளவு சாந்தம் தவழுதுன்னு பாருங்க... இவளா மூணு பேரை அரிவாளால் வெட்டிக் கொன்னுருப்பா...?''

''பார்க்கறதுக்குத்தான் சாந்தமா இருக்கா... புதுக்கவிதை எழுதற பொண்ணுன்னு அந்த ஆர்ட்டிக்கிள்லயே போட்டிருக்கு பாருங்க... கட்டம் கட்டி வெளியாகியிருக்கிற அவ எழுதின புதுக்கவிதையைப் படிச்சுப் பார்த்தீங்களா...? புருஷன் ராவணனா இருந்தா டைனமைட்டா மாறி வெடிச்சுத் தகர்ப்போம்ன்னு அர்த்தம் வர்ற மாதிரி கவிதை எழுதியிருக்கா... அவ மனசில் எவ்வளவு ஆத்திரம் இருந்திருக்கணும்...?''

சிரித்தார் சிதம்பரநாதன்.

''கவிதை, கதை, இலக்கியம்ன்னு படைக்கிறவங்க எல்லாம் உண்மையில் அட்டைக் கத்தி எடுத்து சண்டை போடறவங்க... நிஜக்கத்தியைத் தூக்கற தைரியம் அவங்களுக்கு என்னிக்குமே வராது...''

''எமோஷனலான சூழ்நிலைகளில் சொந்த சுபாவங்கள் எல்லாம் ஒதுங்கிப் போய் எந்த மனுஷனுமே மிருகமாயிடுவான்... இது உங்களுக்குத் தெரியாத புது விஷயம் இல்லை...''

''வாஸ்தவம்தான் இளங்கோ... ஆனா இந்தப் பொண்ணு எமோஷனல் ஆகிற டைப் இல்லைன்னு என் மனசுக்குப்படுது...''

''ஒவ்வொருத்தரோட மனசுக்குப் படறதையெல்லாம்

கோர்ட் எத்துக்குமா ஸார்…? அவ மேல கொலைக் குற்றத்தை உறுதிப்படுத்தற ஆதாரங்களும், சாட்சிகளும் நிறைய இருக்கு…''

''ஒவ்வொண்ணா சொல்லுங்க பார்க்கலாம்…''

''சௌம்யாவைப் போலீஸ் பிடிக்கிறப்போ அவ கையில் அரிவாள் இருந்திருக்கு. தவிர அவ உடையெல்லாம் ரத்தக் கறை…''

''சரி… அப்பறம்…?''

''புருஷன், மாமனார், மாமியார் மூணு பேரும் சேர்ந்து செஞ்ச கொடுமைகளையும் அட்டூழியங்களையும் தாங்கிக்க முடியாம நானேதான் அவங்களைக் கொலை செஞ்சேன்னு சௌம்யா போலீஸ்கிட்டே ஒப்புதல் வாக்குமூலம் தந்திருக்கா…''

''சரி… மேல சொல்லுங்க…''

''இதுக்கெல்லாம் முத்தாய்ப்பு வைக்கிற மாதிரி நடந்த கொலையை நேரில் பார்த்த ஐ விட்னஸ்கள் அஞ்சாறு பேர் இருக்காங்க… கூப்பரச் சத்தம் கேட்டு ஓடி வந்த பக்கத்து வீட்டுக்காரங்க… அவங்க.''

''ஸோ…?''

''சௌம்யாதான் கொலை செஞ்சிருக்கான்னு கோர்ட்டில் நிரூபிக்க க்ரிஸ்டல் க்ளியரான இந்த சாட்சிகளும் ஆதாரங்களும் எல்லாத்துக்கும் மேல அவ கொடுத்த சொந்த ஒப்புதல் வாக்குமூலமே போதும். எதிரணி வக்கீல்… 'தூக்கு தண்டனை வேண்டாம்… தண்டனையைக் குறைச்சுக் குடுங்க'ன்னு - இந்த ரீதியில்தான் வாதாட முடியுமேயொழிய… சௌம்யா கொலையே செய்யலைன்னு வாதிட எந்த முகாந்திரமும் இல்லை…''

சிதம்பரநாதன் நிமிர்ந்தார்.

''சௌம்யா அந்தக் கொலைகளை செய்யலைன்னு நான் வாதாடி அவளுக்கு விடுதலை வாங்கித் தர நினைக்கிறேன்… இந்த வழக்கில் நான் தோத்துப் போவேன்னு நினைக்கறீங்களா இளங்கோ…?''



''சர்ட்டன்லி…''

''வழக்கில் நான் ஜெயிக்கப் போறேன். சேலஞ்ஜ்.''

''சேலஞ்ஜ்ன்னு வெறுமனே வாயில் சேலஞ்ச் பண்ணிக்கறதில் என்ன இருக்கு…? வழக்கில் நீங்க தோத்துட்டா எனக்கு ஒரு புத்தம் புது ஹூண்டாய் கார் நீங்க எனக்கு வாங்கித் தரணும்… ஜெயிச்சுட்டா நான் வாங்கித்தரேன்…''

''ஓக்கே…'' என்று தலையசைத்தார் சிதம்பரநாதன்.

''இப்பவே கார் புக் பண்ணி வெச்சுருங்க…''

லேசான கிண்டல் தொனியில் சொன்ன இளங்கோவைப் பார்த்து பெரியதொரு -

புன்னகை பூத்தார் சிதம்பரநாதன்.

## 2



**உன்னைக் கல்யாணம் செய்து கொண்டதால் இனி ஆஷ்ட்ரே தேவையில்லை - எனக்கூறும் கணவனே இந்த ஆஷ்ட்ரேக்களில் இருப்பது வெறும் சாம்பல் அல்ல. நீறு பூத்த நெருப்பு.**

ஐம்பத்திநான்கு வயது சீனிவாசனும், அவருடைய மகன் ராகுலும் சிதம்பரநாதனின் அலுவலகத்தில் அவருடைய இருக்கைக்கு எதிரே உட்கார்ந்திருந்தார்கள்.

சிதம்பரநாதன் மெல்லிய புன்னகையோடு சொன்னார்.

''மிஸ்டர் சீனிவாசன்… உங்க மகள் சௌம்யா சார்பா நான் கோர்ட்டில் ஆஜராகி வாதாட முடிவு

பண்ணியிருக்கேன்... உங்களுக்குத் தகவல் வந்து சேர்ந்ததா...?''

''உங்க ஆபீஸ் ஸ்டாஃப் ஒருத்தர் வந்து விஷயத்தைச் சொன்னார்... உங்களை நேரில் வந்து பார்க்கச் சொன்னார்... அதான் நானும் என் பையனும் கிளம்பி வந்தோம்...''

''நான் ஆஜராகறதில் உங்களுக்கு ஏதாவது ஆட்சேபணை இருக்கா...?''

சீனிவாசனும், ராகுலும் தழுதழுத்த குரலில் ஒரு சேர மறுத்துச் சொன்னார்கள்.

''நிச்சயமா கிடையாது ஸார்...''

''அதுக்காக சொல்லலை... நீங்க ஏற்கெனவே யாராவது வக்கீலை அமர்த்தி இருக்கலாம்... அவருக்கும் இதில் எந்த சங்கடமும் ஏற்படக்கூடாது...''

''நாங்க அப்ரோச் பண்ணின பெரும்பாலான வக்கீல்கள் கேஸை எடுத்துக்கவே மறுத்துட்டாங்க... 'உங்க பொண்ணே ஒப்புதல் வாக்குமூலம் தந்துட்டா... ஐ விட்னஸ் வேற இருக்கு. இந்த கேசுக்காக வாதாடறதுங்கிறது செத்த பாம்பை அடிக்கிறதுக்கு சமமான காரியம்...' அப்படின்னு வெளிப்படையாகவே சொல்லிட்டாங்க... நாங்க என்ன பண்றதுன்னு தவிச்சுட்டு இருந்த சமயத்தில் தான் உங்ககிட்டே இருந்து தகவல் வந்தது... ஆனா...''

''ஆனா என்ன?''

''நீங்க நிறைய ஃபீஸ் வாங்கற பிரபலமான லாயர்... அவ்வளவு தொகையை ஃபீஸா குடுக்கற அளவுக்கு எனக்கு வசதி இல்லை... நான் ஒரு சாதாரண கவர்மெண்ட் சர்வண்ட்...''

தன் உதடுகளில் மீண்டும் புன்னகையை வெளிப்படுத்தினார் சிதம்பரநாதன்.

''முக்கியமான விஷயத்தை நான் சொல்லவே இல்லையே... இந்த வழக்குக்காக நான் ஒரு ரூபாய் கூட



வாங்கறதில்லைன்னு முடிவு பண்ணிட்டுதான் உங்களைக் கூப்பிட்டனுப்பினேன்.''

இருவரும் திகைப்பில் கண்கள் பளபளக்க அவரைப் பார்வையில் வாங்கினார்கள். ராகுல் கேட்டான்.

''எதனால நீங்க இப்படி ஒரு முடிவுக்கு வந்தீங்க...''

''உங்க பொண்ணு சௌம்யா கொலை செஞ்சிருக்க மாட்டாள்ன்னு என்னோட உள்ளுணர்வு சொல்றது... பணத்தைத் துரத்தித் துரத்திப் பிடிச்சு அலுத்துப் போயிருக்கும் என் மனசுக்குள் ஆத்ம திருப்திக்காக இந்தக் கேஸை எடுத்து நடத்தி அந்தப் பொண்ணைக் காப்பாத்தினா என்னன்னு பட்டது...''

சிதம்பரநாதன் கேஸை எடுத்து நடத்தப் போகிறார் என்பதால் உற்பத்தியான ஆறுதல் அலைகள் மனசின் ஒரு புறம் மோதிக் கொண்டிருந்தாலும் இன்னோர் புறம் கவலை அரித்துக் கொண்டு இருக்க கேட்டார் சீனிவாசன்.

''சௌம்யா கொலை செஞ்சிருக்க மாட்டாள்ன்னு மூணாம் நபரான உங்களுக்கே உள்ளுணர்வு தோணியிருக்கு. விஷயம் கேள்விப்பட்ட எங்களாலேயும் முதல்ல நம்பவே முடியலை... கோழிக்குஞ்சு மாதிரி அடங்கி ஒடுங்கிப் போயிட்டிருந்த சௌம்யாவால் எப்படி மூணு பேரை வெட்டிச் சாய்க்க முடியும்ன்னு நம்பிக்கையே இல்லாமல்தான் அவங்க வீட்டுக்குப் போனோம்... நடந்ததைப் பார்த்தப்புறம்... சௌம்யா பொறுமையின் எல்லையைக் கடந்துதான் இந்தக் காரியத்தைச் செஞ்சிருக்கான்னு தெரிஞ்சது...''

''உண்மையில் என்ன நடந்ததுன்னு எனக்கு நீங்க விபரமா சொல்ல முடியுமா சீனிவாசன்...?''

சிதம்பரநாதன் கேட்க,

அவர் தலையை அசைத்துவிட்டு உடைந்து போன குரலில் சொல்ல ஆரம்பித்தார்.

''சௌம்யாவைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தது

எங்களை விடக் கொஞ்சம் வசதியான இடத்தில்தான். அவ நல்லபடியா வாழ்ந்துகிட்டிருக்காள்ன்னுதான் சம்பவம் நடக்கிற அன்னிக்கு வரைக்கும் நாங்க நினைச்சிட்டிருந்தோம்... ஏன்னா செளம்யா தன் புருஷன் வீட்டு பிரச்னைகளைப்பற்றி வாயைத் திறந்து ஒருநாள்கூட பிறந்த வீட்டில் சொன்னதில்லை...''

''உங்க மாப்பிள்ளை என்ன பண்ணிட்டிருந்தான்.''

''பிஸினஸ் பண்ணிட்டிருந்தான்... ஆயில் மர்ச்சென்ட்... பிஸினஸ் ஓஹோன்னுதான் நடந்திட்டிருந்தது... பணம் கொழிச்சிட்டிருந்தது... ஆனா பார்வைக்கு கண்ணியமா தெரியற அவங்க மூணு பேருக்குள்ளேயும் இவ்வளவு மிருக குணமும் இருக்கும்ன்னு நான் கொஞ்சம் கூட நினைக்கலை...''

''மூணு பேருன்னு யாரைச் சொல்றீங்க...?''

''செளம்யாவின் புருஷன்... மாமனார்... மாமியார்...''

''வரதட்சணை கேட்டு கொடுமைப் படுத்தினாங்களா..?''

''என்னைப் பொறுத்தவரைக்கும் அவங்க சொன்னதுக்கு மேலேயே நான் செஞ்சிட்டேன்... எனக்கிருக்கறது ஒரே ஒரு பொண்ணு... அவளுக்கு செய்யாம நான் வேற யாருக்கு செய்யப்போறேன்... அதிலெல்லாம் ஒரு துளிகூட குறை வைக்கலை ஸார்...''

''அப்படின்னா வேற எந்த வகையில் கொடுமைப்படுத்தினாங்க...''

''சில விஷயங்களைச் சொல்லவே எனக்கு நாக்கு கூசுது ஸார்...''

''வக்கீல் கிட்டேயும், டாக்டர் கிட்டேயும் எல்லா விஷயங்களையும் சொல்லித்தான் ஆகணும்... நடந்தது எல்லாத்தையுமே ஒண்ணு விடாம சொல்லுங்க... அதை வெச்சுத்தான் நான் சில முடிவுகளை எடுக்க முடியும்... அதுக்குத் தகுந்த மாதிரி ஆர்க்யூமெண்ட்சைக் கொண்டு போக முடியும்...''



சின்னத் தயக்கத்துக்குப் பிறகு சொல்ல ஆரம்பித்தார் சீனிவாசன்.

''செளம்யாவின் புருஷன் அருண் பெரிய குடிகாரன்... அதோட மத்தவங்களைத் துன்புறுத்தி அதில் சந்தோஷம் அனுபவிக்கற ஸாடிஸ்ட்டாவும் இருந்து இருக்கான்... தினமும் குடிச்சுட்டு வந்து அவளை அடிக்கறது... சிகரட்டால உடம்பில் சூடு வெக்கறது... தன்னோட அஞ்சு வயசுப் பொண்ணு பசியால துடிச்சிக்கிட்டு இருக்கிறப்போ... முதல்ல என்னை வந்து கவனிடீன்னு அதட்டி பலவந்தமா தாம்பத்ய உறவு நடத்தறது... இப்படி கொடுமைகள் சத்தமில்லாம ஏராளமா தொடர்ந்திருக்கு...''

''மகனோட இந்த அட்டூழியங்களை அருணோட அப்பாவும் அம்மாவும் கண்டிக்கறதில்லையா...?''

''அதுதான் கொடுமை... செளம்யாவோட மாமியார்க்காரியும், மாமனாரும் வீட்டுக்குள் நடக்கிற இந்த அநியாயங்களைக் கண்டும் காணாம இருந்திருக்காங்க... இவளே அவங்ககிட்டே வாயைத் திறந்து சொன்ன பிறகும் மகனைக் கண்டிக்காம செளம்யாவை மிரட்டி இருக்காங்க...''

''என்னன்னு...?''

''அட்ஜஸ்ட் பண்ணிப் போகலைன்னா வாழாவெட்டியா உன்னோட வீட்டுக்குப் போக வேண்டியதுதான்னு சொல்லி இருக்காங்க... என்னோட சந்தோஷத்தைப் பாழாக்கக் கூடாதுங்கறதுக்காகவே செளம்யா இந்த ஆறு வருஷங்களா பல்லைக் கடிச்சிட்டு எல்லாத்தையுமே பொறுத்துக்கிட்டிருந்திருக்கா...''

''ஆறு வருஷமா பொறுத்துப் போனவ திடீர்ன்னு எப்படி எல்லை மீறிப் போய் எல்லாரையும் வெட்டிச் சாய்ச்சா...?''

''அதுக்குக் காரணம்... உச்சக்கட்டமா நடந்த இரண்டு கொடுமைகள்... அருண் கண்ட கண்ட

பெண்களையும் படுக்கையறைக்கே கூட்டிட்டு வந்து கூத்து அடிக்க ஆரம்பிச்சிருக்கான்... அதைவிட அநியாயமா அந்த ராஸ்கல்... சௌம்யாவின் மாமனார்... அருண் இல்லாத நேரங்களில் அவளை பலவந்தப்படுத்த முயற்சிக்க ஆரம்பிச்சிருக்கான்... மாமியார்க்காரி அதையும் சட்டை செய்யவே இல்லை... என் புருஷன் எது கேட்டாலும் குடுக்க வேண்டியதுதானேன்னு அலட்சியமா சொல்லி இருக்கா...''

சிதம்பரநாதன் அவர் சொல்வதையெல்லாம் அதிர்ச்சியோடு காதில் வாங்கிக் கொண்டிருந்தார்.

''நீங்க சொல்றதை எல்லாம் கேட்க கேட்க கொடுமையா இருக்கே...?''

''அத்தனை கோபத்தையும் மனசுக்குள்ளேயே வருஷக்கணக்கா பூட்டி வெச்சிருந்தா சௌம்யா...''

இப்போது ராகுல் தொடர்ந்தான்.

''ஆமா ஸார்... மாமனார் தப்பா நடந்துகிட்டதை மாமியார்க்காரியும் புருஷன்காரனும் கண்டுக்காம இருக்கவே அவளுக்குள்ளே அத்தனை நாளா அடக்கி வெச்சிருந்த எரிமலை பெரிசா வெடிச்சிடுச்சு... அதன் விளைவை அவங்க சந்திச்சிட்டாங்க... சில நிமிஷ மரண வேதனையோட அவங்க போய்ச் சேர்ந்துட்டாங்க... ஆனா சௌம்யாதான் இப்போ கொலைக் குற்றவாளியா போலீஸின் பிடியில் மாட்டிகிட்டு அவஸ்தைப்படறா...''

சிதம்பரநாதன் குறுக்கிட்டார்.

''சௌம்யா கொலை செஞ்சான்னு நீங்களே சொல்லலாமா... ராகுல்...?''

''உண்மையை ஒத்துக்கத்தானே வேணும்...''

''சௌம்யாதான் உண்மையில் கொலை செஞ்சான்னு நீங்க எதை வெச்சு சொல்றீங்க...? நீங்க நேரடியா பார்த்தீங்களா...?''

''இல்லை... மத்தவங்க சொல்றதையும் சந்தர்ப்ப



சூழ்நிலையையும் வெச்சுத்தான் நான் அப்படிச் சொன்னேன்... தவிர சௌம்யாவே போலீஸில் ஒப்புதல் வாக்கு மூலம் வேற தந்திருக்கா...''

''நான் கொலையை நேரில் பார்க்காதவன்... சௌம்யா கொலை செஞ்சிருக்க மாட்டான்னு எனக்குள்ளே ஒரு நம்பிக்கை... அதை நிரூபிக்க ஆதாரம் தேடி என் மனசுக்குள்ளே சில யோசனைகள் இருக்கு. ஸோ... கேஸை சுலபமா முடிக்கறதுக்காக போலீஸ் சௌம்யாகிட்டே பலவந்தமா வாக்குமூலம் வாங்கியிருக்குமோன்னு என்னோட மனசாட்சி சொல்றது...''

சீனிவாசனும், ராகுலும் திகைப்புடன் நிமிர்ந்தார்கள்.

''இ... இதை நாங்க யோசிக்கவே இல்லை ஸார்... போலீஸ் பலவந்தமா வாக்குமூலம் வாங்கியிருக்காங்கன்னு கோர்ட்டில் எப்படி நிரூபிக்க முடியும்...?''

''சௌம்யா தன் வாயாலே இதை கோர்ட்டில் சொல்லணும்... அது ரொம்ப சுலபம்... என் மேல அவளுக்கு நம்பிக்கை பிறந்தா போதும்... நான் அவகிட்டே அஞ்சு நிமிஷம் பேசினேன்னா போலீஸ் மேல அவளுக்கு இருக்கிற பயத்தை நான் போக்கிடுவேன்... அதுக்கப்புறம் அவ தைரியமா... தன்னை பயமுறுத்தி வாக்குமூலம் வாங்கினாங்கன்னு கோர்ட்டில் சொல்லிடுவா...''

சிதம்பரநாதன் சொல்ல அவர்கள் இருவரின் முகங்களிலும் கவலை இருட்டாகப் பரவியது.

''லாயர் ஸார்... நீங்க வேணா சௌம்யாகிட்டே பேசலாம்... ஆனா அவ உங்ககிட்டே பேச மாட்டா...''

திகைப்பு தழுவும் முகத்தோடு நிமிர்ந்தார் சிம்பரநாதன்.

''ஏன்...?''

''ஏன்னா... அவ இப்போ ஜெயில்ல இல்லை.

போலீஸ் பாதுகாப்போட ஆஸ்பத்திரியில் இருக்கா...''

''ஆஸ்பத்திரியிலா...? அவளோட உடம்புக்கு என்ன...?''

''உடம்புக்கு ஒண்ணுமில்லை... மனசு பாதிக்கப்பட்டிருக்கு... ஏதோ வேகத்தில் கொலை நடந்துடுச்சு... போலீஸ்காரங்க வந்ததும் வாக்குமூலம் தந்துட்டா... ஆனா ரத்தச் சகதியில் விழுந்து கிடக்கிற அவங்க மூணு பேரையும் வெறிச்சுப் பார்த்துட்டே இருந்த சௌம்யாவுக்கு நேரம் ஆக ஆக மனசு உடைஞ்சு போச்சு... திக் பிரமை பிடிச்ச மாதிரி ஆயிட்டா... ஒரே இடத்தை வெறிச்சுப் பார்த்திட்டிருக்கா... யார் என்ன கேட்டாலும் மவுனம்தான் அவளோட பதிலாக இருக்கு... இந்த நிலைமையில் போலீஸ் தன்னிடம் பலவந்தப் படுத்தி வாக்குமூலம் வாங்கினாங்கன்னு கோர்ட்டில் அவளால எப்படிச் சொல்ல முடியும்...?''

சிதம்பரநாதனின் முகப்பரப்பில் அதிர்ச்சி அலைகள் உற்பத்தியாயின.

## 3

அம்மி மிதித்து அருந்ததி பார்க்கச் சொன்னார்கள்.
எவனோ ஒரு அருந்ததியைப்
பார்த்துக் கொண்டிருந்தீர்கள்
என்பது அன்றே தெரிந்திருந்தால்
அக்னியை வலம் வந்திருக்க
மாட்டேன்.
உங்களைச் சுற்றி அக்னியை
வலம் வரச் செய்திருப்பேன்.





கவர்மெண்ட் ஆஸ்பத்திரி சிதிலமான காம்பவுண்ட் சுவர்களுக்குள் சற்றே அழுக்காக இருந்தது.

சிதம்பரநாதன் காரை ஆஸ்பத்திரி வளாகத்திற்குள் செலுத்தி ஒரு அடர்த்தியான மரத்தின் நிழலில் நிறுத்தினார்.

காம்பவுண்ட் பூராவும் திட்டுத் திட்டாகத் தெரிந்த மனித கும்பல்களில் நிறைய கவலை முகங்களைப் பார்க்க முடிந்தது. உத்தியோக நிமித்தமாய் டாக்டர்கள், நர்ஸ்கள், சில போலீஸ் துறை ஆட்கள் ஆகியோர் மட்டும் அலட்சிய முகங்களுடன் வளைய வந்து கொண்டிருந்தார்கள்.

சிதம்பரநாதன் போர்டிகோ படிகளில் உயர்ந்து வராந்தா மொசைக்கில் நடந்து சென்றார்.

அவுட் பேஷண்ட் வார்டு.

லேபர் வார்டு.

ஆர்த்தோ வார்டு.

எமர்ஜென்ஸி வார்டு.

கார்டியாலஜி.

அம்புக் குறி போர்டுகளோடு ஒவ்வொரு வார்டாய் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்க மனநல மருத்துவப் பிரிவைத் தொட்டு டாக்டரின் அறையை சமீபித்தார்.

''மே ஐ கமின் டாக்டர்...?''

வழுக்கைத் தலை மின்ன குனிந்து எழுதிக் கொண்டிருந்த டாக்டர் வில்சன் நிமிர்ந்தார்.

''எஸ்...''

மேஜையை நெருங்கிய சிதம்பரநாதனை நெற்றி சுருங்கப் பார்த்த டாக்டர் வில்சன் இருக்கையைக் காட்டினார்.

''ப்ளீஸ்...''

''தேங்க்யூ... பை த பை... ஐயாம் லீடிங் க்ரிமினல் லாயர் சிதம்பரநாதன்.''

எதிர் நாற்காலியில் அமர்ந்து கொண்டே கையை நீட்டினார் சிதம்பரநாதன்.

வில்சனின் முகத்தில் லேசான மகிழ்ச்சி அரும்பியது.

''ஓ... வெரி க்ளாட் டு மீட் யூ... உங்களைப் பத்தி நிறைய கேள்விப்பட்டிருக்கேன்... ஆனா... இந்த ஊருக்கு மாத்தலாகி வந்த இந்த நாலு மாசத்தில் உங்களை சந்திக்கும் சந்தர்ப்பம் இப்போதான் கிடைச்சிருக்கு...''

''ஒரு கேஸ் விஷயமாகத்தான் நான் இங்கே வந்தேன்...''

''சொல்லுங்க... என்ன விஷயம்...? என்னால முடிஞ்ச எந்த உதவியையும் செய்ய நான் தயாரா இருக்கேன்...''

''சௌம்யாங்கற பொண்ணுக்காக நான் கோர்ட்டில் ஆஜராகப் போறேன்... அந்த சௌம்யா இங்கே உங்க வார்டில்தான் அட்மிட் செய்யப்பட்டிருக்கா...''

நிமிர்ந்து உட்கார்ந்தார் வில்சன்.

''மாமனார்... மாமியார்... புருஷன்... மூணு பேரையும் மர்டர் பண்ணின அந்தப் பொண்ணையா சொல்றீங்க...?''

''எஸ்...''

''அவ இப்போ போலீஸ் கஸ்டடியில் அல்லவா இருக்கா...''

''தெரியும்...''

''போலீஸின் அனுமதி இல்லாம நான் உங்களை அந்தப் பொண்ணோட அறைக்குள் அலவ் பண்ண முடியாது...''

சிதம்பரநாதன் மெலிதாகப் புன்னகைத்தார்.

''ஏஸ் ஏ க்ரிமினல் லாயர்... எனக்கு இந்த ஃபார்மாலிட்டி கூடத் தெரியாதா...? கோர்ட் அனுமதியோட தான் நான் வந்திருக்கேன்... உங்களோட சம்மதத்தோடு அந்தப் பொண்ணை நான் சந்திக்கலாம்னு நீதிபதி உத்தரவுப் பத்திரம்



தந்திருக்கார்...''

சொல்லிக் கொண்டே அந்தப் பழுப்பான அரசாங்கக் காகிதத்தை அவருக்கு எதிரே காட்டினார் சிதம்பரநாதன்.

அதை வாங்கி சொற்ப விநாடிகள் பார்வையிட்ட வில்சன் தலையை அசைத்தார்.

''தென் நோ ப்ராப்ளம்...''

இருக்கையை விட்டு எழுந்து கொண்டே வில்சன் தொடர்ந்து சொன்னார்.

''ஆனா அந்தப் பொண்ணை சந்திப்பதால் உங்களுக்கு எந்தப் பிரயோஜனமும் ஏற்படப் போறதா எனக்குத் தெரியலை... மிஸ்டர் சிதம்பரநாதன்...''

''ஏன்... அப்படிச் சொல்றீங்க...?''

வராந்தாவில் நடந்து கொண்டே அவர் கேட்க, வில்சன் பதில் அளித்தார்.

''அவ கம்ப்ளீட்டா சித்த சுவாதீனமில்லாம இருக்கா... அவகிட்டே உருப்படியான தகவல்கள் எதையும் நீங்க கேட்டுத் தெரிஞ்சிக்க முடியாது...''

''அவளைப் பேச வைக்க முயற்சி பண்றேன்... அவ பேசினா... பேசற வார்த்தைகளில் ஏதாவது க்ளு கிடைக்குமான்னு பார்க்கறேன்...''

''பொதுவா சித்த சுவாதீனமில்லாதவங்க.... எதையாவது உளறிட்டு இருப்பாங்க... ஆனா சௌம்யா அப்படி இல்லை... அவளோட அடி மனசில் வெட்டுக் காயம் மாதிரி பாதிப்பு ஏற்பட்டிருக்கு... அதன் விளைவா அவ திக் பிரமை பிடிச்ச மாதிரி ஆயிட்டா... யார் கிட்டயும் ஒரு வார்த்தையும் பேசறதில்லை...''

''அவளைக் குணமாக்கற முயற்சி எந்த அளவில் இருக்குன்னு சொல்ல முடியுமா டாக்டர்...?''

''ஐ யாம் ட்ரையிங் மை லெவல் பெஸ்ட்... சௌம்யாவோட மனசுக்குள்ளே அவளோட புருஷன், மாமனார், மாமியார் மூணு பேரும் ரத்த வெள்ளத்தில் பிணமாகக் கிடக்கிற காட்சிதான் உறைஞ்சு

போயிருக்கு... அதை அழிக்கணும்... அந்த மொமன்ட்டிலிருந்து அவளை மீட்கணும்... அப்போதான் அவளால நார்மல் கண்டிஷனுக்கு வர முடியும்...''

பேசிக்கொண்டே வராந்தாவின் கோடியிலிருந்த அந்த அறையைத் தொட்டார்கள்.

அறை வாயிலின் இரண்டு புறமும் கான்ஸ்டபிள்கள் நின்றிருந்தார்கள்.

அவர்களிடம் கோர்ட் ஆர்டர் காகிதத்தைக் காட்டிவிட்டு சிதம்பரநாதனை உள்ளே கூட்டிச்சென்றார் வில்சன்.

அறையின் மையத்தில் போடப்பட்டிருந்த கட்டில் வெள்ளை விரிப்பு கலையாமல் கிடக்க, ஒரு மூலையில் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் சௌம்யா.

விரிந்த கண்கள் சீலிங்கையே பலமாய் வெறித்துக் கொண்டிருந்தன.

பக்கத்தில் போய் சிதம்பரநாதன் கூப்பிட்டார்.

''சௌம்யா...''

அவளிடம் எந்த ரியாக்ஷனும் இல்லை...

''சௌம்யா...''

''......''

இரண்டாவது முறை கூப்பிட்ட பின் மெதுவாய்த் திரும்பிப் பார்த்தவள்... சிதம்பரநாதனை சில விநாடிகள் பார்த்துவிட்டு எந்தச் சலனமும் இல்லாமல் மீண்டும் சீலிங்கிலேயே பார்வையைப் பொருத்திக் கொண்டாள்...

''சௌம்யா... இங்கே பாரும்மா... நான் ஒரு வக்கீல்... உன்மேல விழுந்திருக்கிற கொலைக் குற்றத்தை இல்லாமே பண்ணி உன்னை தண்டனையிலிருந்து காப்பாத்தறதுக்காக வந்திருக்கேன்...''

அவளிடம் எந்தச் சலனமும் இல்லை.

சிதம்பரநாதன் தொடர்ந்து சொன்னார்.



''நீ மனசுவிட்டு என்கிட்டே பேசினாத்தான் என்னால் உனக்கு உதவி செய்ய முடியும்...''

சௌம்யா இறுக்கமான மவுனத்தில் இருந்தாள்.

டாக்டர் வில்சன் குறுக்கிட்டார்.

''அவ கண்ணுக்கு முன்னாடி இப்போ அவங்க மூணு பேரும் கொலையாகிக் கிடக்கிற அந்த அதிர்ச்சியான காட்சிதான் இருக்கு மிஸ்டர் சிதம்பரநாதன்... அதனால நானோ நீங்களோ என்ன பேசினாலும் அதை ஒரு பொருட்டா அவ எடுத்துக்க மாட்டா... நம்ம பேச்சு அவளை பாதிக்கவே பாதிக்காது...''

சிதம்பரநாதன் மேலும் சில நிமிஷங்கள் அவளைப் பேச வைக்கும் முயற்சியில் ஈடுபட்டும் முடியாமல் போகவே...

ஒரு பெருமூச்சோடு மெல்ல நடந்து வெளியே வந்தார்.

அதே வினாடி வராந்தாவில் இன்ஸ்பெக்டர் தயாநிதி சீரான பூட்ஸ் சத்தத்தோடு வந்து கொண்டிருந்தார். பக்கத்தில் வந்ததும்...

சிதம்பரநாதனைப் பார்த்து - பார்வையில் புன்னகை பூத்தார்.

''எப்படி இருக்கீங்க சிதம்பரநாதன்...?''

குறுக்கிட்டு டாக்டர் வில்சன் விடை பெற்றார்.

''நீங்க பேசிட்டிருங்க... நான் இப்போ ரவுண்ட்ஸ் போகணும்...''

''தேங்க்யூ டாக்டர்...''

அவருக்கு விடை கொடுத்துவிட்டு இன்ஸ்பெக்டர் தயாநிதிக்கு சிதம்பரநாதன் பதிலளித்தார்.

''வெரி... ஃபைன்.''

''உங்களைப் பார்க்கறதுக்காகத்தான் நான் அவசர அவசரமாக வந்திட்டிருக்கேன்.''

''என்னைப் பார்க்கணும்ன்னா நீங்க என்னோட ஆபீஸுக்குத்தானே வரணும்... இங்கே எப்படி வந்தீங்க...?''

''நீங்க சௌம்யாவைப் பார்த்துப் பேச கோர்ட் ஆர்டர் வாங்கிட்டு வந்திருக்கீங்கன்னு கேள்விப்பட்டேன்... அதனாலதான் நேரா இங்கே வந்தேன்...''

''சொல்லுங்க... என்ன விஷயம்...?''

''சௌம்யாவுக்காக நீங்க ஆஜராகறீங்கன்னு கேள்விப்பட்டதும் எனக்கு ஆச்சர்யம்...''

''இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கு...?''

''இவ்வளவு வீக்கான கேஸை நீங்க எப்பவுமே எடுக்க மாட்டீங்களே...?''

''இது வீக்கான கேஸ்ன்னு யார் சொன்னது...?''

''என்ன சிதம்பரநாதன்...? கொலை செஞ்சது நான்தான்னு அவளே ஒப்புதல் வாக்குமூலம் தந்துட்டா... இதுக்கு மேல என்ன வேணும்...?''

''அது மட்டும் போதுமா...? யாராவது ஒருத்தர் முன்வந்து நான்தான் கொலை செஞ்சேன்னு சொன்னா அதை கோர்ட் உடனே ஏத்துக்குமா...?''

''மத்த ஆதாரங்கள்... சாட்சிகள்... எல்லாமே க்ரிஸ்டல் க்ளியரா இருக்கு... ஆயுதத்தில் சௌம்யாவின் கைரேகை இருக்கு... பக்கத்து வீட்டுக்காரங்க ஐ விட்னஸா இருக்காங்க...''

''தெரியும் இன்ஸ்பெக்டர்... கேஸைப் பத்தின எல்லா விபரங்களையும் ஒண்ணு விடாம படிச்சுப் பார்த்துட்டேன்...''

''அதுக்கப்புறமும் இந்தக் கேஸை நீங்க எடுக்கறீங்களா...?''

''இந்த கேஸில் எனக்கு ஹோப் இருக்கு... சௌம்யா கொலை செய்யலை...''

''அப்படின்னா அந்த வாக்குமூலம்...?''

''நீங்க பலவந்தப்படுத்தி வாங்கியிருக்கலாமே...?'' புன்னகையோடு சிதம்பரநாதன் சொல்ல இன்ஸ்பெக்டர் தயாநிதி நிமிர்ந்தார்.

''இப்படி எங்களை டிஃபண்ட் பண்ண நினைக்கறீங்களா...?''



''உண்மை அதுதானே...?''

''என்னை உங்களுக்கு நல்லாத் தெரியும்... நான் முடிஞ்சவரைக்கும் நேர்மையா நடந்துக்கற டைப்... இதுவரைக்கும் எந்த சூழ்நிலையிலும் யார்கிட்டேயும் கட்டாயப்படுத்தி நான் வாக்குமூலம் வாங்கினதில்லை...''

''பர்சனலால உங்களை எனக்குத் தெரியும்ங்கறது வேற விஷயம்... ஆனா கோர்ட், வாதம்ன்னு வந்துட்டா... இந்த பர்சனல் ஃப்ரெண்ட்ஷிப்பையெல்லாம் பார்க்க முடியுமா?''

''க்ரிஸ்டல் க்ளியரான ஒரு கேஸில் அநாவசியமா நீங்க குழப்பத்தை ஏற்படுத்தறீங்களோன்னுதான் எனக்கு வருத்தமா இருக்கு... வலுக்கட்டாயமா வாக்குமூலம் வாங்கினேன்னு நீங்க கோர்ட்டில் ஆர்க்யூ பண்ணினா எடுபடாது...''

''ஏன்...?''

''இதை சௌம்யாதான் கோர்ட்டில் சொல்லணும்... ஆனா அப்படிச் சொல்லக்கூடிய நிலைமையில் அவ இல்லை... தவிர அவ வாக்குமூலம் தந்தப்ப பக்கத்து வீட்டுக்காரர் ஒருவர் கூட இருந்தார்... தேவைப்பட்டா அவரை சாட்சியா விசாரிச்ச பிறகு உங்க வாதம் தவிடு பொடியாய்ப்போயிடும்...''

''நீங்க இன்னும் எத்தனை சாட்சிகளை வேணா சேர்த்துக்கங்க... ஆனா சௌம்யா கொலை செய்யலை... இதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கு...''

''உங்களோட நம்பிக்கைகளைப் பத்தி கோர்ட் கவலைப்படப் போறதில்லையே... அதை நிரூபிக்கறதுதானே கோர்ட்டுக்கு முக்கியம்...?''

''சௌம்யா கொலை செய்யலைன்னு கண்டிப்பா கோர்ட்டில் நிரூபிப்பேன்...''

''எப்படி...?''

''கோர்ட் விவகாரத்தை நாம கோர்ட்டிலேயே

பேசிக்கலாமே இன்ஸ்பெக்டர்...''

சிரித்துக் கொண்டே சொன்ன சிதம்பரநாதனை கோபக் கண்களால் பார்த்தார் தயாநிதி.

---

# 4

---



**இனியும் சகிக்க மாட்டேன். என் வீட்டு மிருகங்களை வதை செய்ய தீர்மானம் செய்துவிட்டேன். ப்ளூக்ராஸ் என்னை மன்னிக்குமாக.**

கோர்ட் சற்றே பரபரப்புடன் இருந்தது.

பார்வையாளர்கள் பகுதியில் வழக்குடன் சம்பந்தமில்லாத சில வக்கீல்களையும் பார்க்க முடிந்தது. சிதம்பரநாதன் இந்த வழக்கை எடுத்துக் கொண்ட ஆச்சர்யத்தில் அவர் தரப்பு வாதத்தை கேட்கிற ஆர்வத்துடன் வந்திருந்தார்கள். சில பத்திரிகை ஆட்களையும் ஸ்க்ரிப்ளிங் பேடுடன் பார்க்க முடிந்தது.

நீதிபதி கோர்ட்டுக்குள் நுழைந்தவுடன் சலசலப்பு சட்டென்று கரண்ட் கட் ஆனதைப் போல நின்று போனது.

அவர் அமர்ந்த உயரமான இருக்கையை நோக்கி குமாஸ்தா கேஸ் கட்டுகளை பவ்யமாக நீட்டினார்.

அரசுத் தரப்பு வக்கிலை நோக்கிப் பார்வையைச் செலுத்திய நீதிபதி தலையை அசைத்தார்.

''வழக்கைத் தொடங்கலாம்...''

இரண்டு பெண் கான்ஸ்டபிள்கள் சௌம்யாவை அழைத்துக் கொண்டு வந்து குற்றவாளிக் கூண்டில் நிறுத்தினார்கள்.



தனது நாற்காலியைப் பின்னுக்கு நகர்த்தி எழுந்து வந்தார் பப்ளிக் ப்ராசிக்யூட்டர். கணீரென்ற குரலில் பேச்சை ஆரம்பித்தார்.

''யுவர் ஆனர்... வாத - பிரதிவாதங்களுக்கு அதிகமாக இடமில்லாத தெள்ளத் தெளிவான வழக்கு இது... குற்றம் சாட்டப்பட்டு இருக்கும் சௌம்யா... தனது மாமனார், மாமியார், கணவன் ஆகியோரின் கொடுமைகள் தாங்காமல் தான் அவர்களைக் கொலை செய்ததாக ஒப்புதல் வாக்கு மூலம் தந்திருக்கிறார்...''

''அப்ஜெக்ஷன் யுவர் ஆனர்...''

சொல்லிக் கொண்டே எழுந்தார் சிதம்பரநாதன்.

''எஸ் ப்ரொசிட்...''

சிதம்பரநாதன் கம்பீரக் குரலில் பேசினார்.

''சௌம்யா ஒப்புதல் வாக்குமூலம் தந்திருக்கிறாள் என்று பப்ளிக் ப்ராசிக்யூட்டர் சொல்வதில் எனக்கு ஆட்சேபணை இருக்கிறது... அது மட்டுமில்லை... இந்த வழக்கு தெள்ளத் தெளிவாக சௌம்யாவைக் குற்றவாளியாகக் காட்டுகிறது என்று அவர் சொல்வதையும் நான் மறுக்கிறேன்...''

''உங்கள் மறுப்பை விளக்கமாய்ச் சொல்லுங்கள்...''

''சௌம்யா சித்த பிரமை பிடித்தவராக இருக்கிறாள்... இதில் ப்ராசிக்யூட்டருக்கு ஏதேனும் மாற்றுக் கருத்து உள்ளதா...?''

சிதம்பரநாதன் கேட்டதும், அவர் தயக்கத்துடன் தலையை அசைத்தார்.

''இல்லை...''

''இப்போது சௌம்யா போலீஸ் பாதுகாப்புடன் அரசாங்க ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறாள் இல்லையா...?''

''ஆமாம்...''

''மனநிலை சரியில்லாத சௌம்யா தான் கொலை

செய்ததாக ஒப்புதல் வாக்குமூலம் தந்திருக்கிறாள் என்று ப்ராசிக்யூஷன் தரப்பில் சொல்லப்படுவது மிகவும் வேடிக்கையாக இல்லை...?''

சிதம்பரநாதன் கேட்டதும் பார்வையாளர்கள் பகுதியில் சலசலப்பு எழ ஆரம்பித்தது.

நீதிபதி மரச்சுத்தியால் மேஜையைத் தட்டினார்.

''ஆர்டர்... ஆர்டர்.''

பப்ளிக் ப்ராசிக்யூட்டர் அடிபட்ட பார்வையில் சிதம்பரநாதனைப் பார்த்துக் கொண்டே விறைப்பாய்ச் சொன்னார்.

''யுவர் ஆனர்... எதிர்தரப்பு வக்கில் குழப்பம் விளைவித்து அதில் லாபம் காணப் பார்க்கிறார்...''

''என்னுடைய கேள்வி தெளிவாகத்தான் இருக்கிறது யுவர் ஆனர்... குழப்பம் அவர்கள் தரப்பு வாதத்தில் தான் இருக்கிறது... சுற்றி வளைக்காமல்' என் கேள்விக்கு நேராக பதில் அளிக்கச் சொல்லுங்கள்...''

''உங்கள் கேள்வி என்ன...?'' என்றார் ப்ராசிக்யூட்டர்.

''மனநிலை சரியில்லாத சௌம்யா தான் கொலை செய்ததாக ஒப்புதல் வாக்குமூலம் தந்திருக்கிறாள் என்று ப்ராசிக்யூஷன் தரப்பில் சொல்லப்படுவது இடிக்கிறதே...?''

''வாக்குமூலம் தரும்போது அவள் நல்ல மனநிலையில்தான் இருந்தாள்...''

''எப்படிச் சொல்கிறீர்கள்...? அவள் அப்போது தெளிவான மனநிலையில்தான் இருந்தாள் என்பதற்கு என்ன அளவுகோல்...? சௌம்யா திக்பிரமை அடைந்ததற்குக் காரணமே அவள் வீட்டைச் சேர்ந்தவர்கள் ஒரே சமயத்தில் படுகொலை ஆனதால்தான்... அந்த அதிர்ச்சியான நிலைமையில் அவளிடம் போய்ப் போலீஸ் தங்களுக்கே உரிய கிடுக்கிப் பிடித்தனமாக கேள்விகளைக் கேட்டிருப்பார்கள்... மனநிலை பாதிக்கப்பட்ட



சௌம்யா எதையாவது உளறி இருப்பாள்... அதை ஒப்புதல் வாக்குமூலம் என்று எடுத்துக் கொள்வது என்ன நியாயம்...?''

''யுவர் ஆனர்... சௌம்யா வாக்குமூலம் தந்தபோது அவளுடைய பக்கத்து வீட்டுக்காரர் ஒருவர்கூட இருந்திருக்கிறார்... ஆக சாட்சி உள்ளது... வேண்டுமானால் எதிர்தரப்பு வக்கில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்து கொள்ளலாம்...''

நீதிபதி சிதம்பரநாதனைப் பார்த்தார்.

''குறுக்கு விசாரணை செய்ய விரும்புகிறீர்களா...?''

''நோ யுவர் ஆனர்... அதற்கான அவசியம் இல்லை... சௌம்யா வாக்குமூலம் தந்திருக்கிறாள் என்பதை நான் மறுக்கவில்லை..., அதற்கு சாட்சியம் இருந்திருக்கலாம்... ஆனால்... அவள் நல்ல மனநிலையில் வாக்கு மூலம் தநதாளா என்பதுதான் என்னுடைய வாதம்... அதை எந்த சாட்சி கொண்டு அவர்களால் நிரூபிக்க முடியும்...?''

நீதிபதி தடிமனான பேனாவால் குறிப்பு எழுதிக் கொண்டே சொன்னார்.

''எதிர்தரப்பு வக்கீலின் கேள்வியில் நியாயம் உள்ளது. சௌம்யா தற்சமயம் நல்ல மன நிலையிலிருந்தால் ஒப்புதல் வாக்குமூலத்தில் சந்தேகம் எழ வாய்ப்பில்லை... ஆனால் இப்போது அவள் சித்த பிரமை பிடித்த நிலையில் இருக்கிறாள்... அவள் மனத் தெளிவோடுதான் வாக்குமூலம் தந்தாளா என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு ப்ராசிக்யூஷன் தரப்புக்கு உள்ளது...''

''தேங்க்யூ யுவர் ஆனர்...''

சிதம்பரநாதன் நன்றி சொல்ல - கடுகடுத்த முகத்தோடு பப்ளிக் ப்ராசிக்யூட்டர் குறுக்கிட்டார்.

''மன்னிக்க வேண்டும் யுவர் ஆனர்... அப்போதைய அவள் மன நிலையை நேரடியாய் நிரூபிக்க

இயலாவிட்டாலும் கொலையைப் பார்த்த நேரடி சாட்சியங்கள் இரண்டு பேர் இருக்கிறார்கள்... சாட்சிகள் பற்றிய விவரம் கேஸ் தஸ்தாவேஜுகளில் குறிப்பிட்டிருக்கிறேன்...''

''அந்த சாட்சிகளை நான் விசாரிக்க விரும்புகிறேன் யுவர் ஆனர்...''

சிதம்பரநாதன் குறுக்கிட்டுக் கேட்க நீதிபதி தலையசைத்தார்.

''குறுக்கு விசாரணைக்கு அனுமதி அளிக்கிறேன்...''

அவர் சொன்னதும் கோர்ட் டவாலி குரல் கொடுத்தார்.

''சாட்சி எண் ஒன்று... முத்துசாமி... முத்துசாமி... முத்துசாமி...''

அந்த முத்துசாமி சாட்சிக் கூண்டில் ஏறி நின்றார்.

நடுத்தர வயதில் தெரிந்தார்.

தலைப் பிரதேசம் நாற்பது சதவீதம் நரையை வாங்கியிருந்தது.

சிதம்பரநாதன் சாட்சிக் கூண்டை நெருங்கி கைப் பிடியில் முழங்கையை ஊன்றி நின்று கொண்டு முத்துசாமியைப் பார்த்தார்.

''உங்க பேர் முத்துசாமியா...?''

''ஆமா...''

''எங்கே, என்ன வேலை பார்க்கிறீங்க...?''

''ஸ்வதிக் டெக்ஸ்டைல்சில் பர்சனல் ஆபீசரா இருக்கேன்...''

''உங்க வீடு...?''

''சௌம்யா வீட்டுக்கு நேர் எதிர் வீடுதான்...''

''எத்தனை வருஷமா அங்கே குடி இருக்கீங்க...?''

''அஞ்சு வருஷமா...''

''அப்படின்னா சௌம்யா குடும்பத்தோடு உங்களுக்கு நல்ல பழக்கம் இருக்கா...?''

''அவங்க குடும்பத்தைச் சேர்ந்தவங்களைத் தெரியும்... ஆனா நல்ல பழக்கம் இருக்குன்னு சொல்ல



முடியாது... ஏன்னா அந்த ஏரியா அப்படி... அங்கே யாரும் நெய்பர்ஸோட சகஜமா பழகறதில்லை...''

''நீங்க பார்த்த வரைக்கும் சௌம்யா வீட்டைப் பத்திச் சொல்ல முடியுமா...? அவங்க சௌம்யாவை எப்படி வெச்சிருந்தாங்க...? ரொம்ப கொடுமைப் படுத்துவாங்களா...?''

''தெரியலை... வீட்டுக்குள்ளே என்ன நடக்கிறதுன்னு யாருக்குத் தெரியும்... அந்தக் கொலைகள் நடந்த பின்னால்தான்... இவ்வளவு அநியாயங்கள் அந்தப் பொண்ணு மேல சத்தமில்லாம நடந்திருக்கான்னு எங்களுக்கே ஆச்சர்யமா இருந்தது...''

''கொலை நடந்ததை நீங்க கண்ணால பார்த்தீங்கன்னு சொன்னாங்க... நடந்த சம்பவத்தை தெளிவா இப்போ கோர்ட்டில் சொல்ல முடியுமா...?''

''சொல்றேன்... சம்பவ தினத்தன்னிக்கு காலைல பெரிய களேபரச் சத்தம் கேட்டது... ஜன்னலைத் திறந்து பார்த்தேன்... சத்தம் சௌம்யா வீட்டிலிருந்துதான் கேட்டது...''

''எத்தனை மணி இருக்கும்...?''

''காலைல அஞ்சு நாற்பத்தஞ்சு இருக்கும்...''

''சரி மேல சொல்லுங்க...''

''நான் வெளியே வந்தேன்... எங்க வீட்டுக் காம்பவுண்ட் கதவிலிருந்து பார்த்தா நேரா சௌம்யா வீட்டு ஹால் தெரியும்...''

''ஹால்ல என்ன பார்த்தீங்க...?''

''சௌம்யா ஒரு பெரிய அரிவாளோட அவங்க வீட்டைச் சேர்ந்த ஒவ்வொருத்தரையும் துரத்தித் துரத்தி கொலை செஞ்சிட்டிருந்தா... அதைப் பார்த்துட்டு நான்தான் போலீசுக்கு போன் பண்ணி விஷயத்தைச் சொன்னேன்...''

சிதம்பரநாதன் தன் கறுப்புக் கோட்டுக்குள் கையை நுழைத்து ஒரு போஸ்ட் கார்டு சைஸ் போட்டோவை

எடுத்து அவரிடம் காட்டினார்.

''சௌம்யா கையில் நீங்க பார்த்த அரிவாள் இதுதானா பாருங்க...''

பப்ளிக் ப்ராசிக்யூட்டர் குறுக்கிட்டார்.

''அப்ஜெக்ஷன் யுவர் ஆனர்... எதிர் தரப்பு வக்கீல் அநாவசியமான கேள்விகளைக் கேட்கிறார்...''

''அவசியமாகத்தான் கேட்கிறேன் யுவர் ஆனர்...''

''முத்துசாமி கொலை நடந்ததைப் பார்த்ததற்கு சாட்சி... அரிவாளை அடையாளம் காட்டச் சொல்வது சரியல்ல...''

''சாட்சியைப் பரிசோதிக்க வேண்டிய அவசியம் எனக்கு உள்ளது யுவர் ஆனர்...''

''அப்ஜெக்ஷன் ஓவர் ரூல்டு... நீங்கள் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யலாம்...''

பப்ளிக் ப்ராசிக்யூட்டர் முகம் கறுத்துப் போய் உட்கார சிதம்பரநாதன் பெருமித முகத்தோடு ஜட்ஜைப் பார்த்து, ''தேங்க்யூ யுவர் ஆனர்...'' என்று சொல்லிவிட்டு குறுக்கு விசாரணையைத் தொடர்ந்தார்.

''சொல்லுங்க மிஸ்டர் முத்துசாமி... இந்த போட்டோவிலிருக்கும் அரிவாள் அன்னிக்கு சௌம்யா கொலை செய்யப் பயன்படுத்தியதுதானான்னு பார்த்துச் சொல்லுங்க...''

முத்துசாமி தன் பாக்கெட்டிலிருந்து தடிமனான கண்ணாடியை நாசிக்குக் கொடுத்துவிட்டு அந்த போட்டோவை வாங்கிப் பார்வையில் போட்டார்.

''இ... இந்த போட்டோவில் அரிவாள் எதுவும் இல்லையே...?''

புன்னகைத்தார் சிதம்பரநாதன்.

''வெல்... நீங்க கண்ணாடி போடுவீங்களா...?''

''ஆமா... படிக்கிறப்போவும்... எழுதறப்போவும் மட்டும் போடுவேன்...''

''உத்துப் பார்க்க வேண்டிய விஷயங்களை கண்ணாடி



போட்டால்தான் உங்களால பார்க்க முடியும்...?''

''ஆமா...''

''அன்னிக்கு களேபரச் சத்தம் கேட்டு எழுந்து போய் பார்த்ததா சொன்னீங்க... அப்போ கண்ணாடி போட்டிருந்தீங்களா...?''

''வழக்கமா படிக்கறப்போ எழுதறப்போ மட்டும்தான் கண்ணாடி போடுவேன்...''

''ஸோ சம்பவத்தைப் பார்த்தப்போ நீங்க கண்ணாடி அணியலை...?''

''ஆமா...''

''அதுவும் உங்க வீட்டிலிருந்து பார்த்துட்டிருந்தீங்க...''

''ஆமா...''

''விடியகாலை அஞ்சே முக்கால் மணிக்கு...?''

''ஆமா...''

கோட் பாக்கெட்டிலிருந்து இன்னொரு தாளை உருவி அவரிடம் காட்டிக் கொண்டே சொன்னார் சிதம்பரநாதன்.

''இது என்ன தெரியுமா...? வானிலை ஆராய்ச்சி மையத்திலிருந்து வாங்கிட்டு வந்த ரிப்போர்ட்... இந்த மாசத்தில் சூரிய உதயம்... அஸ்தமன நேரம் பத்தின விபரங்கள் துல்லியமாய் கணிக்கப்பட்டு இதில் எழுதியிருக்கு... இந்த மாசம் பூராவும் சூரிய உதயம் சுமார் ஆறேகால் மணி போலத்தான் இருக்கும்ங்கிறது இந்த ரிப்போர்ட்டைப் பார்த்தா தெரியும். ஆக அஞ்சே முக்கால் இருட்டில் கண்ணாடி கூட போடாம நீங்க பார்த்திருக்கீங்க... உங்க சாட்சியை அஸ்திவாரமா போட்டு கேஸை எழுப்ப நினைக்கும் அரசுத் தரப்பை நினைச்சு அழுவதா சிரிப்பதான்னு எனக்குத் தெரியலை...''

''வீட்டுக்குள் லைட் எரிஞ்சிட்டுதான் இருந்தது... ஒரு இளம்பெண் ஆவேசமா துரத்தித் துரத்தி எல்லாரையும்

கொலை செஞ்சா...''

''ஒரு இளம் பெண் நாட் சௌம்யா... நோட் திஸ் பாயிண்ட் யுவர் ஆனர்...''

''அந்த வீட்டில் சௌம்யாவைத் தவிர வேற இளம்பெண் யாருமில்லையே...''

''அதனால சௌம்யாதான் கொலை செஞ்சாள்ன்னு நீங்க சொல்றீங்களா...?''

''ஆமா...''

''ஸாரி மிஸ்டர் முத்துசாமி... கெஸ் ஒர்க்கெல்லாம் கோர்ட்டில் செல்லுபடியாகாது... அது உங்களுக்கு வேணா தெரியாம இருக்கலாம்... ஆனா ப்ராசிக்யூஷன் தரப்பைச் சேர்ந்தவங்களுக்கு நல்லாவே தெரிஞ்சிருக்கணுமே... தட்ஸ் ஆல் யுவர் ஆனர்...''

சிதம்பரநாதன் தன்னுடைய இருக்கைக்குத் திரும்பிச் செல்ல - மழை பெய்து ஓய்ந்த மாதிரி நிசப்தம் கோர்ட்டில் நிலவியது.

நீதிபதியின் வெண்கலக் குரல் நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு பிறந்தது.

''இந்த வழக்கின் வாத - பிரதிவாதங்களைக் கேட்ட பிறகு சௌம்யா மேல் உள்ள கொலைக் குற்றச்சாட்டை ப்ராசிக்யூஷன் தரப்பில் சரி வர நிரூபிக்கவில்லை என்று தெரிகிறது... அதே சமயம் சௌம்யா கொலை செய்யவில்லை என்பதற்கும் ஆணித்தரமான ஆதாரம் எதையும் டிஃபன்ஸ் தரப்பில் முன் வைக்கவில்லை... இரு தரப்பினர்க்கும் ஒரு வார கால அவகாசம் தருகிறேன்... அவரவர் தரப்பு வாதத்தை வலுவான ஆதாரங்களோடு நிரூபிக்க உத்தரவிடுகிறேன்... வழக்கு ஒரு வார காலத்திற்கு ஒத்தி வைக்கப்படுகிறது...''

நீதிபதி எழுந்து சென்றதும் சலசலப்புடன் கோர்ட் கலைந்தது.

சிதம்பரநாதன் கோட்டைக் கழற்றி கையில் வைத்துக் கொண்டு மிடுக்குடன் நடந்து வந்தார்.



சீனிவாசனும், ராகுலும் அவரை எதிர் கொண்டார்கள்.

சீனிவாசன் அவருடைய கைகளை இறுக்கமாய்ப் பற்றிக் கொண்டு கண்களில் தளும்பும் கண்ணீருடன் குரல் தழுதழுத்தார்.

''லாயர் சார்... நீங்க எங்களுக்கு தெய்வம் மாதிரி... உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை... உங்க கால்ல விழுந்து கும்பிட்டாலும் தகும்...''

''பெரிய வார்த்தையெல்லாம் பேசாதீங்க...''

ராகுல் படபடப்புடன் சொன்னான்.

''இனி என் தங்கச்சியோட வாழ்க்கையே அவ்வளவுதான்னு நினைச்சேன்... அவளோட குழந்தைக்கு இனி அம்மா இல்லைன்னு கவலைப்பட்டேன்... இப்போ எங்களுக்கு லேசா நம்பிக்கை ஏற்பட்டிருக்கு...''

''எதிர் தரப்பு வாதத்தை உடைச்சிருக்கோம் அவ்வளவுதான்... இதனாலேயே சௌம்யா மேல உள்ள கொலைப் பழி விலகிடுச்சுன்னு சொல்ல முடியாது... சௌம்யா கொலை செய்யலைன்னு ஆணித்தரமா நிரூபிக்க வேண்டிய பெரிய பொறுப்பு அடுத்து காத்திருக்கு...''

சொன்ன சிதம்பரநாதன் அவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லிவிட்டுத் தன்னுடைய காரை நோக்கிச் சென்றார்.

காருக்குள் அமர்ந்ததும் செல் போனை உயிர்ப்பித்தார்.

''ஹலோ... ஐ யாம் சிதம்பரநாதன்...''

''சொல்லுங்க... நான் இளங்கோ தான் பேசறேன்...''

''கோர்ட்டில் ஃபர்ஸ்ட் ஹியரிங் முடிஞ்சது...''

இளங்கோ மெல்லிய சிரிப்போடு சொன்னார்.

''விஷயத்தைக் கேள்விப்பட்டேன்...''

''அதுக்குள்ளேயா...?''

''ஆமா... ஹாண்டாய் கார் வாங்கித் தர்றேன்னு பெட் கட்டிட்டேன்... கேஸை கூர்ந்து கவனிச்சித்தானே ஆகணும்... என்னோட ஆபீஸ் ஸ்டாஃப் ஒருத்தரை கோர்ட்டுக்கு அனுப்பியிருந்தேன்... அவர் நடந்த விஷயங்களை என்கிட்டே சொல்லிட்டார்...''

''எப்படி என்னோட ஆர்க்யூமெண்ட்...?''

''நீங்க க்ரேட் க்ரிமினல் லாயர்ங்கறதை மறுபடியும் நிரூபிச்சிட்டீங்க சிதம்பரநாதன். கேஸ்ல ஹோப்பே இல்லைன்னுதான் நான் உட்பட எல்லாருமே நினைச்சிட்டிருந்தோம்... இவ்வளவு ஓட்டைகள் இருக்குன்னு உங்க வாதத்தைக் கேட்ட பிறகுதான் தெரிஞ்சது...''

''தேங்க்யூ... இப்ப சொல்லுங்க... காரை நான் புக் பண்ணணுமா... இல்லை நீங்க புக் பண்றீங்களா...?''

''ஏன் அவசரப்படறீங்க... உங்க தரப்பு வாதத்தை ஆணித்தரமா நிரூபிக்கச் சொல்லி ஜட்ஜ் ஒரு வாரம் டைம் தந்திருக்காரே... நீங்க முதல்ல நிரூபியுங்க... தீர்ப்பு வர்றதுக்கு முன்னாலேயே நாமாக எப்படி ஒரு விஷயத்தைத் தீர்மானிக்க முடியும்...''

''ஓ.கே... நானா... நீங்களான்னு பார்த்துடுவோம்...''

சிரித்துக் கொண்டே போனை அணைத்தார்.

இக்னீஷியனை உயிர்ப்பிக்க முயற்சித்தபோது காரின் ஜன்னல் கண்ணாடி அருகே நிழலாடவே...

சட்டென்று திரும்பினார்.

இன்ஸ்பெக்டர் தயாநிதி அங்கே நின்றிருந்தார்.

கண்ணாடியைக் கீழே இறக்கிவிட்டு அவரைப் பார்த்தார்.

''எக்ஸ்க்யூஸ்மி மிஸ்டர் சிதம்பரநாதன்...''

''எஸ்...''

''நான் உங்ககூட கொஞ்சம் பேசணும்...'' என்றார் இன்ஸ்பெக்டர் தயாநிதி.

# 5



என் பிரியமானவராக இருந்தவரே...
பொறுமைக்கும் எல்லை உண்டு.
இனியும் உன் இம்சைகளைத்
தாங்கிக் கொள்ள மனதில் வலு
இல்லை.
இந்த மாத பட்ஜெட்டில் ஒரு துப்பாக்கியும் சில
தோட்டாக்களும் வாங்கப் பணம் ஒதுக்க வேண்டும்.

கார் சிதம்பரநாதனின் அலுவலக போர்டிகோவில் ஓய்ந்து நின்றது.

''ப்ளீஸ் கம் இன்ஸ்பெக்டர்...''

தயாநிதியை உள்ளே வரவேற்றுக் கூட்டிப் போனார் சிதம்பரநாதன்.

ஒரு மினி பங்களா அலுவலகமாக மாறியிருந்தது.

டிராயிங் ரூம் ரிசப்ஷனிஸ்ட் மற்றும் சில சோபாக்கள் சகிதமாய் இருந்தது.

பக்கவாட்டில் இருந்த நீளமான ஹால் நிறைய மேஜை சேர்களோடு ஜூனியர்களுக்கான அலுவலக அறையாகக் காட்சி அளித்தது.

கடந்து சென்றால் ஆட்டோமாட்டிக் டோர் க்ளோஸரோடு ஒரு ஏசி அறை.

அறையின் கதவில் 'சிதம்பரநாதன்' என்று மெட்டல் எழுத்துக்கள் பளிச்சிட்டன.

''உள்ளே வாங்க இன்ஸ்பெக்டர்...''

தயாநிதியைத் திரும்பிப் பார்த்து மறுபடி ஒருமுறை அழைத்துவிட்டு அந்த ஏசி அறைக்குள் நுழைந்தார்.

''உக்காருங்க...''

தயாநிதி குஷன் இருக்கையில் அமர சிதம்பரநாதன் தன்னுடைய சுழல் நாற்காலியை ஆக்ரமித்தார்.

''கோர்ட் கேம்ப்பஸ்க்குள்ளே ஃப்ரீயா பேச முடியாது. அதனாலதான் ஆபீசுக்கே போயிடலாம்ன்னு சொன்னேன். சொல்லுங்க என்கிட்டே என்ன பேசணும்...?''

ஒரிரு விநாடி மவுனத்துக்குப் பின் தயாநிதி சொன்னார்.

''சௌம்யா கேஸ் சம்பந்தமாகத்தான் பேசணும்...''

''பேசுங்க...''

''இன்னிக்கு கோர்ட்ல உங்க ஆர்க்யூமெண்ட் ரொம்ப நல்லா இருந்தது...''

''உங்க பாராட்டுக்கு ரொம்ப நன்றி... ஆனா என்னோட ஆர்க்யூமெண்ட் உங்களுக்கு பாதகமா அல்லவா அமைஞ்சிருக்கு...?''

''அப்படி நான் நினைக்கலை சிதம்பரநாதன்... நான் மத்தவங்களைப் போல 'நான் பிடிச்ச முயலுக்கு மூணு கால்'ன்னு வறட்டுப் பிடிவாதம் பிடிக்கிற ஆள் இல்லை... நியாயத்தை யார் எடுத்துச் சொன்னாலும் மனசுக்குள் அசை போட்டு முடிவெடுப்பேன்...''

''அப்போ என்னோட ஆர்க்யூமெண்ட்ல நியாயம் இருக்குதுன்னு ஒத்துக்கறீங்களா...''

''நோ... நோ... நீங்களும் கிட்டத்தட்ட என்னைப் போலத்தான் மத்தவங்க கருத்துக்கு மதிப்புத் தருவீங்கன்னு நம்பறேன்...''

''என்னோட ஆர்க்யூமெண்ட்ல ஏதாவது டிஸ்ஒப்பீனியன் வெச்சிருக்கீங்களா...?''

''ஆமா...''

''அப்படி ஏதும் இருந்தா கோர்ட் மூலமாகவே அதை நீங்க ஹேண்டில் பண்ணலாமே...?''

''இல்லை சிதம்பரநாதன்... எனக்கு உங்களைப்



பத்தித் தெரியும்... உங்க கட்சி ஜெயிக்கணும்கறதுக்காக நீங்க குயுக்தியா வாதாட மாட்டீங்க... நீங்க எடுத்துக்கற எல்லா கேஸிலுமே உங்க பக்கம் நியாயம் இருக்கும்... அப்படி இருந்தால்தான் நீங்க கேஸையே தொடுவீங்க...''

''நேரடியா விஷயத்துக்கு வாங்க இன்ஸ்பெக்டர்...''

''என்னோட தரப்பில் தோக்கறது ஜெயிக்கறதுங்கிற பேச்சே இல்லை... குற்றவாளியை சரியா கண்டு பிடிச்சு அவனுக்கு தண்டனை வாங்கித் தரணும்... அது சௌம்யாவா இருந்தாலும் சரி... வேற யாரா இருந்தாலும் சரி...''

''ஐ அக்ரி வித் யூ...''

''சௌம்யாதான் குற்றவாளின்னு என் தரப்பு விசாரணையில் தெளிவா தெரிஞ்சது... ஆனா உங்க கோர்ட் ஆர்க்யூமெண்டுக்கப்புறம் சட்டபூர்வமா அது பிசுபிசுத்துப் போச்சு... இந்தக் கொலை வழக்கை ஆரம்பத்திலிருந்து நானே நேரடியா ஹேண்டில் பண்ணிட்டு வர்றேன்... என்னோட சப்ஆர்டினேட்ஸ் யாரும் சௌம்யா கிட்டே வாக்குமூலம் வாங்கலை.. நானே தான் வாங்கினேன்... அவ நல்ல நினைவோட தான் வாக்குமூலம் தந்தாள்ங்கறதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை...''

''ஸோ...?''

''சட்டபூர்வமா உங்க வாதம்தான் அங்கே எடுபட்டாலும் ஜட்ஜை நியாயத்துக்குப் புறம்பா தீர்ப்பளிக்க வைக்கிற மாதிரி செஞ்சிட்டு வர்றீங்களே...''

''நான் அப்படி வாதாடலைன்னா சௌம்யாவைக் குற்றவாளி ஆக்கிடுவீங்களே...?''

''அதுதானே உண்மை...''

''இல்லை இன்ஸ்பெக்டர்... சௌம்யா கொலை செய்யலை...''

''அப்படின்னா அவ குடுத்த ஒப்புதல் வாக்குமூலம்...? நல்ல மனநிலையில் இருந்து அவ அந்த வாக்குமூலத்தைத் தரலைன்னு கோர்ட்டில் சொன்ன மாதிரி என்கிட்டேயும் சொல்லாதீங்க...''

''இல்லை... பர்சனலா உங்ககிட்டே நான் இப்போ பேசிட்டிருக்கேன்... ஸோ... அந்த மாதிரி விடை தெரியாத கேள்வியை வெச்சு ஆர்க்யூ பண்ண விரும்பலை...''

''அப்படின்னா என்னோட' கேள்விக்கு பதில் சொல்லுங்க...''

''மூணு பேரை விரட்டிக் கொலை செய்யற அளவுக்கு சௌம்யாவுக்கு உடம்பிலோ... மனசிலோ... வலு இல்லை... இது என்னோட முதல் பாயிண்ட்...''

''அந்த வாக்குமூலம்...?''

''அவ யாரையோ காப்பாத்துறதுக்காக அப்படி ஒரு வாக்குமூலத்தைக் கொடுத்திருக்கா...''

''வாட் டு யூ மீன்...?''

''சௌம்யா பல நாட்களா கணவன்... மாமியார்... மாம்னார்... இவங்களோட கொடுமையை அனுபவிச்சுட்டு வந்திருக்கா... ஆனா இந்த கொடுமைகளைப் பத்தி பிறந்த வீட்டில் கூட புகார் பண்ணலை... அவங்க நிம்மதி கெட்டுடக் கூடாதுன்னு அவ அப்படிச் செஞ்சிருக்கலாம்... ஆனா, இதையெல்லாம் மனசுக்குள்ளேயே வெச்சிட்டிருந்திருப்பான்னு தோணலை... நிச்சயமா அவளுக்கு நெருக்கமான சர்க்கிள்ல உள்ள யாரிடமாவது மன ஆறுதலுக்காகவாவது இதைப் பத்தி பேசியிருக்கலாம். அவள் மேல் உள்ள பரிவின் காரணமா அவளை இந்தக் கொடுமையிலிருந்து விடுவிக்கணும்கறதுக்காக இதைப் பத்தி தெரிஞ்சவங்க யாராவது இந்தக் காரியத்தைச் செஞ்சிருக்கலாம்... தனக்காகத்தானே இதை செஞ்சாங்கங்கற குற்ற



உணர்வின் காரணமா அவங்களைக் காப்பாத்தறதுக்காக சௌம்யா தான் முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் தந்திருக்கலாம்... ஆனா அவளுக்கே உரிய மெல்லிய மனசு அதுக்கப்புறமா விஷயங்களை அசை போடப் போட திக் பிரமை அடைஞ்சிருப்பா...''

சிதம்பரநாதன் சொல்லி முடிக்க தயாநிதியின் முகப்பரப்பில் உச்ச பட்சமாய்த் திகைப்பு ஆக்ரமித்திருந்தது.

''நான் இந்தக் கேஸை இவ்வளவு டீப்பா யோசிச்சுப் பார்க்கலை சிதம்பரநாதன்... சௌம்யா அரிவாளும் கையுமா பிடிபட்டா... அவளே ஒப்புதல் வாக்கு மூலம் தந்துட்டா... ஸோ கேஸ் க்ரிஸ்ட்டல் க்ளியரா இருக்குன்னு முடிவு பண்ணிட்டேன்...''

''அதுதான் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கும்... ஒரு வக்கீலுக்கும் உள்ள வித்தியாசம்...''

''லெட் இட் பி... சௌம்யா யாருக்காக இவ்வளவு பெரிய பழியைத் தன் மேல போட்டுக்கிட்டிருக்கா...? நிஜமான மர்டரர் யாரு...?''

''அதைத்தான் கண்டு பிடிக்கணும்... கோர்ட் தந்திருக்கிற ஒரு வார அவகாசத்துக்குள் நிஜமான கொலையாளியை நான் கண்டு பிடிக்கப் போறேன்...''

''நான் ஆரம்பத்திலேயே சொன்ன மாதிரி... சௌம்யான்னு இல்லை... கொலையை யார் செஞ்சிருந்தாலும் சரி... நிஜமான கொலையாளி கைது செய்யப்பட்டு தண்டனையை வாங்கிக்கணும்... அதுக்காக என்னாலான எல்லா உதவிகளையும் செய்ய நான் தயாரா இருக்கேன்...''

தயாநிதி சொன்னதும் சிதம்பரநாதன் முகம் மலர்ந்தார்.

''தேங்க்யூ இன்ஸ்பெக்டர்... இந்தக் காரியத்தில் நான் தன்னந்தனியா இறங்குறதை விட போலீஸ் எந்திரத்தின் துணையோட இறங்கினேன்னா நான் நினைக்கிற

விஷயங்களை இன்னும் சுலபமா கேதர் பண்ண முடியும்... உங்க உதவியை நான் மனப்பூர்வமா வரவேற்று ஏத்துக்கறேன்...''

''இப்போ உங்க முயற்சியின் முதல் கட்ட நடவடிக்கை என்ன...?''

''பேசி நேரத்தை வீணாக்க வேண்டாம்... செயல்ல இறங்கலாம்... இஃப் யூ டோண்ட் மைண்ட்... இப்பவே என்னோட கிளம்பிவாங்க...''

ஒரு இளைஞனுக்குரிய துடிப்போடு எழுந்தார் சிதம்பரநாதன்.

# 6

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன
என்றுதான் நம்பிக்கொண்டிருந்தேன் -
நாம் திருமண வாழ்க்கையைத்
துவங்கும் வரை.



நரகத்திலும் நிச்சயிக்கப்படுகின்றன
என்பதைத்
தெரிந்து கொண்டேன் -
நாம் திருமண வாழ்க்கையைத்
துவக்கிய பின்.

அருண் இல்லம்.

முகப்பில் க்ரானைட்டால் என்கிரேவ் செய்யப்பட்டிருந்த அந்த பங்களா இரண்டு கான்ஸ்டபிள்களின் காவலோடு போலீஸ் கஸ்டடியில் இருந்தது.



சிதம்பரநாதனும், இன்ஸ்பெக்டர் தயாநிதியும் இந்த நிமிஷம் செளம்யாவின் அறையில் இருந்தார்கள்.

மேஜை டிராயர்கள், கட்டில், பீரோ, அலமாரிகள் என்று அத்தனை இடங்களும் ஒரு சதுர மில்லி மீட்டர் பரப்பளவுகூட பாக்கி இல்லாமல் அவர்களின் அலசலுக்கு இலக்காகியிருந்தன.

செளம்யாவின் சில டைரிகள்...

அவளுக்கு வந்த கடிதங்கள்...

போட்டோ ஆல்பங்கள்...

சில பர்சேஸ் பில்கள்...

அவளின் கவிதைப் புத்தகங்கள்...

எல்லாமே தனித் தனியாய்ப் பிரித்து வைக்கப்பட்டிருந்தன.

சிதம்பரநாதன் டைரிகளைப் புரட்டிக் கொண்டிருக்கும் தயாநிதியைப் பார்த்தார்.

''டைரியில் ஏதாவது உருப்படியான தகவல்கள் இருக்கா இன்ஸ்பெக்டர்...?''

''ஊஹூம்...''

''என்ன எழுதியிருக்கா...?''

''பெரும்பாலான பக்கங்கள் எம்ப்ட்டியா இருக்கு... அமாவாசை... பவுர்ணமி, பிரதோஷம்ன்னு கோயிலுக்குப் போக வேண்டிய விசேஷ நாட்களைக் குறிச்சிருக்கா... அதுக்காக மட்டும்தான் டைரியைப் பயன்படுத்திட்டு வந்திருக்கா போலிருக்கு...''

''லெட்டர்ஸ் கொஞ்சம் சுவாரஸ்யமா இருக்கு... தவிர நம்ம கேஸுக்கு உபயோகப்படும் போலிருக்கே...?''

''இசிட்...? யார் எழுதியிருக்காங்க...?''

''அவ கவிதையைப் படிச்சிட்டு ஒரு பொண்ணு ரெகுலரா லெட்டர் எழுதிட்டிருக்கு...''

''எங்கிருந்து...?''

''இதே ஊர்தான்...''

''பேர் என்ன...?''

''நிர்மலா... அறிமுகம் ஆகி ஆறு மாதம் தான் இருக்கும் போலிருக்கு... ஆனா இந்த ஆறு மாதத்திலேயே நல்ல நெருக்கம் ஏற்பட்டிருக்குங்கறது லெட்டரைப் படிச்சுப் பார்த்தாலே தெரியுது...''

''சாம்பிளுக்கு ஒரு லெட்டர் படிங்க...''

''வரிசையா சில லெட்டர்ஸ் படிக்கிறேன் கேளுங்க...''

சொல்லிக் கொண்டே சிதம்பரநாதன் தன் கையிலிருந்த கடிதங்களில் சிலவற்றைப் பிரித்து எடுத்து வைத்துக் கொண்டார்.

தயாநிதி காதைத் தீட்டிக் கொண்டு உன்னிப்பானார்.

சிதம்பரநாதன் மேலாக வைக்கப்பட்டிருந்த கடிதத்தைப் படிக்கத் துவங்கினார்.

அன்புச் சகோதரி சௌம்யா அவர்களுக்கு...

உங்கள் ரசிகை எழுதும் கடிதம்.

நான் பல வருடங்களாக உங்களின் கவிதைகளைப் பல்வேறு இதழ்களிலும் படித்து வருகிறேன்.

உங்களுடைய கவிதைத் தொகுப்புகள் அத்தனையையும் வாங்கி வைத்திருக்கிறேன்.

காலை எழுந்ததும் 'ஆசாரத்துடன் அங்கந்துலக்கி' கந்தர் சஷ்டி கவசம் படிக்கிறேனோ இல்லையோ... உங்களுடைய கவிதை ஒன்றைப் படிப்பதை என்னுடைய அன்றாட ஆரோக்கியமான பழக்கங்களில் ஒன்றாகவே வைத்திருக்கிறேன்.

இதுவரை யாருக்கும் ரசிகை என்று பகிரங்கப் படுத்திக் கொண்டதில்லை. யாருக்கும் இப்படி உட்கார்ந்து பாராட்டுக் கடிதம் எழுதியதும் இல்லை.

அவ்வளவு ஏன்... இத்தனை வருட காலத்தில் உங்களுக்கே கூட நான் கடிதம் எழுதியதில்லையே...

இருந்தும் இந்தக் கடிதத்தை இப்போது எழுதியிருக்கிறேன் ன்றால் அதற்கு வலுவான காரணம்



இருக்கிறது.

காரணம்...?

நேற்று நான் படித்த உங்களின் ஒரு கவிதை. அந்தக் கவிதையின் வீச்சை சாதாரணமாய் யாரும் புரிந்து கொள்ள முடியாது.

அனுபவித்து எழுதப்பட்ட அந்தக் கவிதையை அனுபவித்த என்னைப் போன்றவர்களால்தான் முழுமையாக உணர்ந்து கொள்ள முடியும்.

மனமிருப்பின் பதில் எழுதவும். உங்களுடன் நிறைய விஷயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் போல் இருக்கிறது.

எல்லாம் அந்தக் கவிதையைப் படித்த பின்புதான்.

ப்ரியங்களுடன்,

நிர்மல்.

சிதம்பரநாதன் படித்து முடிக்க, தயாநிதி புன்னகைத்தார்.

''அந்தப் பொண்ணும் கவிதை எழுதக்கூடிய பொண்ணுதான் போலிருக்கு... லெட்டர்ல வந்து விழுந்திருக்கிற வார்த்தைகளையெல்லாம் பார்த்தா அப்படித்தான் தெரியுது...''

''இட் மே பி...''

''சரி... அதிருக்கட்டும் சிதம்பரநாதன்... நீங்க சொன்ன மாதிரி லெட்டர் சுவாரஸ்யமாத்தான் இருக்கு... ஆனா கேஸுக்கு உபயோகப்படலாம்னு எதை வெச்சு சொல்றீங்க...?''

''அந்தப் பொண்ணு எழுதின இன்னும் சில லெட்டர்ஸைப் படிக்கிறேன் கேளுங்க... அதுக்கப்புறமா உங்க கருத்தைச் சொல்லுங்க...''

''படிங்க...''

அடுத்த கடிதத்தைப் படிக்க துவங்கினார் சிதம்பரநாதன்.

அன்புச் சகோதரி சௌம்யாவுக்கு...

உங்கள் கடிதம் கிடைத்தது. வானத்திலிருந்து நிலா இறங்கி வந்து ஒரு மெழுகுவர்த்தியிடம் கை குலுக்கியதைப் போல மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிப் போனேன்.

'எத்தனையோ பேர் பாராட்டி கடிதம் அனுப்புவதுண்டு. ஆனால் யாருக்கும் இதுவரை பதில் அனுப்பியதில்லை' என்று சொல்லியிருந்தீர்கள். 'எந்தக் கவிதையைப் படித்துவிட்டு இந்த லெட்டரை எழுதினீர்கள்?' என்றும் கேட்டிருந்தீர்கள்.

வேண்டுமென்றேதான் கவிதையைக் குறிப்பிடவில்லை. அப்போதுதான் நீங்கள் பதில் எழுதுவீர்கள் என்று திட்டமிட்டுத்தான் அப்படிச் செய்தேன். நான் எதிர்பார்த்த மாதிரியே யார்க்கும் பதில் எழுதாத நீங்கள் எனக்கு எழுதிவிட்டீர்கள். 'நான் துர்பாக்கியவதி அல்ல'. என்ற கவிதையைப் படித்த பின்புதான் கையும் மனசும் பரபரக்க வேகமாய்க் கடிதம் எழுதிப் போட்டேன்.

அது கவிதையே அல்ல. ஆயிரம் போக்ரான் அணுகுண்டுகளுக்குச் சமானம். அந்தக் கவிதையைப் படிக்கிற எந்தப் பெண்ணுமே கணவன் கொடுமை செய்தால் பொறுத்துப் போகமாட்டாள். அவனை வெட்டிச் சாய்த்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பாள். என்ன வேகம்... என்ன உக்கிரம்...

அப்புறம்... நிர்மல் என்ற பெயரைப் பார்த்து பயந்து விட்டீர்களாமே...? நிர்மலாவைத்தான் சுருக்கி நிர்மல் என்று எழுதினேன். என்னைத் தோழிகள் அப்படித்தான் அழைப்பார்கள். என் புதிய தோழியான நீங்களும் அப்படியே என்னை அழைக்கலாம். ஆனால் ஏன் பயப்படவேண்டும்...?

'கவரில் நிர்மல் என்று எழுத வேண்டாம்' என்று



சொன்னது ஏன்...? ஒருவேளை நான் நினைத்த மாதிரியே உங்கள் கவிதைகள் எல்லாம் உங்களின் அனுபவ வெப்பத்திலிருந்து ஜனிப்பவைதானா...? என்னுடைய கணவரைப் போலவே அவரும் கொடுமைக்காரரா...? பதில் ப்ளீஸ்...!

ப்ரியமுடன்,
நிர்மல்.

இரண்டாவது கடிதத்தை சிதம்பரநாதன் படித்து முடித்ததும் சட்டென்று நிமிர்ந்தார் தயாநிதி.

''ஸோ... இந்தப் பொண்ணுக்கு சௌம்யாவோட பிரச்சனையைப் பத்தித் தெரிஞ்சிருக்க வாய்ப்பிருக்கு...?''

''சௌம்யா இந்த லெட்டருக்கு என்ன பதில் எழுதினா என்று தெரியலை... ஒருவேளை தன்னோட கணவனின் கொடுமையை பத்தி எழுதியிருந்தாள்ன்னா நிர்மலாவுக்கு விஷயம் தெரிஞ்சிருக்க வாய்ப்பிருக்கு...''

'' 'எந்தப் பொண்ணுமே கணவன் செய்யும் கொடுமைகளைப் பொறுத்துப் போகக்கூடாது... வெட்டிச் சாய்ச்சிட்டுத்தான் மறுவேளை பார்க்கணும்'ங்கிற மாதிரி எழுதியிருக்கா...''

''ஆமா... மேலும் சில லெட்டர்சைப் படிச்சிப்பாருங்க... அந்த பொண்ணுகிட்டே ஒரு ஆம்பளைக்குச் சமமான முரட்டுக்குணங்கள் இருக்குன்னு தெரியுது...''

அவர் கொடுத்த மற்ற கடிதங்களையும் படித்து முடித்த தயாநிதி ஆமோதிப்பாய்த் தலையசைத்தார்.

''யு ஆர் கரெக்ட்... இந்தப் பொண்ணோட பேக்ரவுண்ட் பத்தி விசாரிக்கணும்... அட்ரஸ் இருக்கா...''

''முதல் முதலா எழுதின லெட்டரில் அட்ரஸ் எழுதியிருக்கா...''

''படிங்க...''

''நம்பர் பதினாறு, இரண்டாவது குறுக்குத் தெரு காமராஜ் நகர்...''

''இந்தப் பொண்ணைப் பத்தின பேக்ரவுண்டை அலசிப் பார்த்துடலாமா சிதம்பரநாதன்...?''

''பார்த்துடலாம்...''

---

# 7

---

அன்பில்லாத கணவனே...
விவாகரத்து செய்து கொள்ளலாம் என்கிறாய்
உன் சௌகரியங்களை உத்தேசித்து.
இந்த விவாகத்தால் நான் இழந்தவை
அத்தனையையும் திரும்பக்
கொடுக்க முடியுமா
உன்னால்?
இன்னொரு பெண்ணை நரகத்தில்
தள்ள
இஷ்டமில்லை எனக்கு.
அதனால் நான் முடிவெடுத்துவிட்டேன்.
உன் வாழ்க்கையை ரத்து செய்வதென்று.



காமராஜர் நகர்.

''நிர்மலாவா...?''

குழப்பமாய் அவன் கேட்க இருவரும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

''இது நிர்மலாவோட வீடுதானே...?''

''இல்லை சார்... நீங்க ஏதோ தப்பான இடத்துக்கு வந்திருக்கீங்க... இந்த வீட்டில் லேடீஸ் யாருமில்லை... ரெண்டு பேச்சிலர்ஸ்தான் தங்கியிருக்கோம்...''



''இசிட்...? உங்க பேரு...?''

''ரமேஷ்...''

''என்ன பண்றீங்க?''

''ராதா மில்ஸில் சூபர்வைஸரா இருக்கேன்...''

''இன்னிக்கு நீங்க வேலைக்குப் போகலையா...?''

''செகண்ட் ஷிஃப்ட்... மத்தியானம் மூணு மணிக்குப் போகணும்...''

''உங்க கூட தங்கியிருக்கிறது...?''

''என் ஃப்ரெண்ட் வாசு...''

''அவர் என்ன பண்றார்...?''

''ஒரு ஃபைனான்ஸ் கம்பெனியில் கிளார்க்கா இருக்கார்...''

''நிர்மலான்னு உங்களுக்கு யாரையாவது தெரியுமா...?''

''தெரியாது ஸார்...''

''ஒருவேளை உங்களுக்கு முன்னால இங்கே குடி இருந்திருப்பாங்களா...?''

''வாய்ப்பே இல்லை ஸார்... இது புதுசா கட்டின வீடு... இந்த வீடு கட்டி முடிச்சதும் முதல் முதலா குடி வந்ததே நாங்கதான்...''

''ஐ ஸீ... உங்க ஃப்ரெண்ட் வேலை பார்க்குற ஃபைனான்ஸ் கம்பெனி எங்கிருக்கு...?''

''மெயின் பஜார்ல... எம். ஆர். காம்ப்ளக்ஸில் இருக்கு ஸார்...''

''ஓ.கே... ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்.''

சொல்லிவிட்டு வெளியே வந்தார்கள்.

சிதம்பரநாதன் திகைப்போடு கேட்டார்.

''இந்த அட்ரஸுக்குத்தானே சௌம்யா பதில் எழுதியிருக்கணும்...? நீங்க அதைப் பத்தி எதுவுமே கேக்காம வந்துட்டீங்க...''

''காரணத்தோடதான் நான் அதைப் பத்திக் கேக்கலை

சிதம்பரநாதன்...''

''என்ன காரணம்...?''

''ஒண்ணு அந்த லெட்டரை இவனுக்கே தெரியாம வாசு வாங்கி இருந்திருக்கலாம்... அல்லது இவன் ஏதோ விஷயத்தை மறைக்கலாம்... அந்தப் பொண்ணு நிர்மலாவும் கணவன்கிட்டே கொடுமைகள் அனுபவிக்கறதா எழுதியிருக்கு... அதன் காரணமா இந்தப் பசங்கள்ல யாரோ ஒருத்தரோட அதுக்கு தொடர்பு ஏற்பட்டிருக்கலாம். கடிதப் போக்குவரத்துக்காக இந்த முகவரியைப் பயன்படுத்தியிருக்கலாம்...''

''மேற்கொண்டு என்ன செய்யப் போறோம்...?''

''லெட்டரை ரிசீவ் பண்றது யாருன்னு நமக்குத் தெரியணும்... அப்படித் தெரிஞ்சா நிர்மலா யாரு... என்னங்கறதை சம்பந்தப்பட்ட ஆள்கிட்டே கேட்டுத் தெரிஞ்சிக்கலாம்...''

''லெட்டரை ரிசீவ் பண்ற ஆளை எப்படி ஐடென்ட்டிஃபை பண்றது...? போஸ்ட் ஆபீஸ்ல விசாரிக்கலாமா...?''

''யு ஆர் கரெக்... பீட் போஸ்ட் மேன்தான் அதைச் சொல்ல முடியும்... அவர்கிட்டே நாம இதைப் பத்தி கேக்கணும்...?''

காரை மெயின் சாலைக்கு விரட்டினார்கள்.

வெள்ளை எழுத்துகளோடு சிவப்பு போர்டு தொங்கிக் கொண்டிருந்த போஸ்ட் ஆபீஸை அடைந்தார்கள்.

தயாநிதி காரை விட்டு இறங்கிச் சென்றார். சிதம்பரநாதன் அவரைப் பின் தொடர்ந்தார்.

இன்ஸ்பெக்டர் உடையைப் பார்த்து உள்ளே மரியாதையோடு எதிர் கொண்டார்கள்.

தயாநிதி விசாரித்தார்.

''காமராஜ் நகர் பீட் போஸ்ட்மேன் யாரு...?''

தலைப் பிரதேசத்தில் சற்றே நரை வாங்கியிருந்த அந்த



தபால்காரரைக் காட்டினார்கள்.

அன்றைக்கு வந்த கடிதக் கட்டுக்களைப் பிரித்துக் கொண்டிருந்த போஸ்ட்மேன் திரும்பினார்.

''உங்ககிட்டே கொஞ்சம் விசாரிக்கணும்...'' என்றார் தயாநிதி.

''என்ன விசாரிக்கணும்...?''

கேட்டுக் கொண்டே வராந்தா ஓரமாய் வந்து நின்றார்.

''எவ்வளவு வருஷமா இந்த போஸ்ட் ஆபீசில் வேலை பார்க்கறீங்க...?''

''பத்து வருஷமா இங்கேதான் இருக்கேன்...''

''அப்படின்னா இந்த ஏரியாவில் இருக்கிற அத்தனை வீடுகளும் உங்களுக்கு அத்துபடியா இருக்கும்... இல்லையா...''

அவர் தலையாட்டினார்.

''நீங்க சொல்றது சரிதான் இன்ஸ்பெக்டர்...''

''காமராஜ் நகர் செக்கண்ட் க்ராஸில் பதினாறாம் நம்பர் வீடு உங்களுக்குத் தெரியுமா...?''

''காமராஜ்நகர்... செக்கண்ட்க்ராஸ்... பதினாறாம் நம்பர் வீடு...''

தயாநிதி சொன்னதை தனக்குள் ஒருமுறை முணுமுணுத்துப் பார்த்து யோசித்தவர் - பலமாய்த் தலையசைத்தார்.

''தெரியும்... ரமேஷ்... வாசுன்னு ரெண்டு பேச்சிலர்ஸ் அங்கே குடி இருக்காங்க...''

''அந்த அட்ரஸை டு அட்ரஸாப் போட்டு நிர்மலான்னு ஒரு பொண்ணு எழுதின மாதிரி லெட்டர் இன்னொரு பொண்ணுக்கு வந்திருக்கு... அந்தப் பொண்ணு நிர்மலாவுக்கு பதில் எழுதியிருக்கா... பதில் லெட்டரை நீங்கதான் டெலிவரி பண்ணியிருக்கணும்...''

''ஆமா... அந்த அட்ரஸில் நிர்மலாங்கற பேரில் வர்ற லெட்டர்ஸை நான் டெலிவரி பண்ணியிருக்கேன்...''

''அதை யார் வாங்கிக்குவா...?''

''வாசு...''

''நிர்மலான்னு அங்கே யாருமே இல்லையே... அப்படியிருக்க நீங்க எப்படி அந்தக் கடிதத்தை டெலிவரி பண்ணலாம்...? இப்படி ஒரு லெட்டர் வரும்... வந்தா என் கையில கொடுத்துடுங்கன்னு வாசு ஏற்கனவே சொல்லியிருக்காரா...?''

''வெறுமனே வாயில் சொல்லியிருந்தா கூட அதை நான் ஏத்துக்கமாட்டேன். அவர் போஸ்ட் மாஸ்ட்டர்கிட்டே எழுதியே கொடுத்திருக்கார்...''

''என்னன்னு...?''

''நிர்மலாங்கற பேரில் எனக்கு லெட்டர்ஸ் வந்தா டெலிவரி பண்ணுங்கன்னு...''

''அப்படி செய்யலாமா...? உண்மையில் நிர்மலான்னு அங்கே யாரும் இருக்காங்களான்னு செக் பண்ண வேண்டாமா...?''

''நிர்மலான்னு அங்கே யாரும் இல்லைன்னு எனக்குத் தெரியும்...''

''அப்புறம் எப்படி அவர் கொடுத்த லெட்டரை அக்செப்ட் பண்ணிகிட்டிங்க...?''

''அந்த பேர்ல அவர் பத்திரிகைகளில் கவிதை எழுதறதா சொன்னார்... பிரசுரமான கவிதை ஒண்ணையும் சாம்ப்பிளுக்கு என்க்ளோஸ் பண்ணியிருந்தார்... அதனால் நிர்மல் அல்லது நிர்மலான்னு லெட்டர் வந்தா அவர்கிட்டே தரச் சொன்னார்...''

சிதம்பரநாதனும் தயாநிதியும் பரஸ்பரம் பார்த்துக் கொண்டார்கள்.

''ஆக... வாசு ஒரு பொண்ணு எழுதற மாதிரி லெட்டர் எழுதி சௌம்யாவை ஏமாத்தியிருக்கான்... அப்படித்தானே...?''

''எக்சாட்லி...''

''எதுக்காக இவ்வளவு க்யூரியாசிட்டியோட லெட்டர்



எழுதியிருக்கான்னு தெரியணும்... இவ்வளவு க்யூரியாசிட்டி உள்ள வாசு சௌம்யாவுக்காக எதையும் செய்யத் தயாரா இருப்பவனாத்தான் இருக்கணும்...''

''நமக்குள்ளே பேசிக்கறதைவிட அவன்கிட்டே நேரடியா விசாரிச்சிப் பார்த்தா இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை கிடைச்சிடும்...''

''அப்படின்னா இப்பவே எம்.ஆர்.காம்ப்ளக்சுக்கு காரை விடலாமா...?''

இஞ்சின் சின்னதாய்க் கனைத்துவிட்டு ஸ்டார்ட் ஆகிக்கொண்டது.

பத்து நிமிஷ விரட்டல்.

சிட்டியின் மத்தியில் இருந்த அந்த காம்ப்ளக்சைத் தொட்டார்கள்.

அதன் இரண்டாவது தளத்திலிருந்த ஃபைனான்ஸ் கம்பெனியை லிஃப்ட்டின் உதவியோடு அணுகி ரிசப்ஷனில் விசாரித்து வாசுவின் மேஜையைத் தொட்டார்கள்.

காக்கி யூனிபார்மைத் பார்த்த அதிர்ச்சி அவன் கண்களில் மெல்லிய படலமாய்த் தெரிந்தது.

''எ... என்கிட்டே விசாரிக்கணுமா...? எ... எதைப் பத்தி...?''

''சௌம்யா வீட்டில் நடந்த மர்டர்ஸ் சம்பந்தமா...''

நேரடியாய் விஷயத்தை உடைத்துவிட்டு அவனை ஆராய்ந்தார் தயாநிதி.

அவன் தயக்கம் வழியும் குரலில் சொன்னான்.

''ஸ... ஸார்... இ... இங்கே உட்கார்ந்து ஃப்ரீயா பேச முடியாது... நாம கான்ட்டீன் போயிடலாமா...?''

''வாங்க...''

காம்ப்ளக்சின் அடித் தளத்திலிருந்த சின்ன ரெஸ்டாரென்ட்டின் வட்ட மேஜையை முக்கோண வடிவில் சூழ்ந்து அமர்ந்தார்கள் மூன்று பேரும்.

ஆவி அசையும் டீ வந்தது.

எடுத்து உறிஞ்சிக் கொண்டே தயாநிதி வாசுவைப்

பார்த்தார்.

''நீங்க செளம்யாவுக்கு எழுதின லெட்டர்சை எல்லாம் நாங்க ஒண்ணு விடாம படிச்சிட்டோம்... சொல்லுங்க வாசு... அந்தக் கொலையை பத்தி என்ன நினைக்கறீங்க...?''

''நா... நான் என்ன நினைக்கறது...?''

''சும்மா ஃப்ராங்க்கா பேசுங்க... அவளுக்கு நிறைய லெட்டரெல்லாம் போட்டிருக்கீங்க... அவளோட பிரச்சனைகள் எல்லாம் உங்களுக்கு ஓரளவு தெரியும்.'' ஒரு வினாடி பேச்சை நிறுத்திவிட்டுப் பின்பு கேட்டார். ''தெரியும்தானே...?''

''தெ... தெரியும்...''

''பதில் லெட்டர்ல தன்னோட பிரச்சனைகள் பத்தி செளம்யா உங்களுக்கு எழுதியிருக்காளா...?''

''இல்லை... எனக்கு எழுதின பதில்களில் அவ தன்னோட நிலைமையைப் பத்தி எதுவுமே எழுதலை... 'நீங்க நினைக்கிற மாதிரி எல்லாம் இல்லை... என்னோட கணவர் என்னை நல்லாத்தான் வெச்சிருக்கார்...' அப்படித்தான் பதில் எழுதினா... சரியான அழுத்தக்காரின்னு நான் நினைச்சிகிட்டேன்... ஆனா நான்... அதாவது நிர்மலா... என்னோட கணவன்கிட்டே அனுபவிக்கும் கொடுமைகளைப் பீத்தி தெரிஞ்சிக்கற ஆர்வம் மட்டும் அவ கடிதங்களில் இருந்தது...''

''நீங்க ஏன் பெண் போர்வையில் லெட்டர் எழுதினீங்க...?''

''நான் நானாகவே அவளுக்குப் பல லெட்டர்ஸ் போட்டிருக்கேன் ஸார்... ஆனா அவ எதுக்குமே பதில் எழுதலை... அதனாலதான் இந்த முடிவுக்கு வந்தேன்... ஒரு பெண்மாதிரி லெட்டர் எழுதி கொஞ்சம் கொஞ்சமா கணவனை உதறித் தள்ள அவ மனசைப் பக்குவப்படுத்தறது... அந்தக் கட்டம் வந்த பிறகு என்னை வெளிப்படுத்திகிட்டு சட்டபூர்வமா



கணவன்கிட்டே இருந்து அவளுக்கு விடுதலை வாங்கித் தந்து நான் அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை தரலாம்ன்னு இருந்தேன் ஸார்... பாவிப் பொண்ணு... அதுக்குள்ளே அவசரப்பட்டுட்டா...''

''செளம்யா மேல உங்களுக்கு என்ன அவ்வளவு அக்கறை...?''

''காலேஜ் படிக்கிறப்போ இருந்தே அவளை எனக்குத் தெரியும்... நான் அவளோட சீனியர்... அவ கவிதைகளை எல்லாம் அப்பவே நல்லா ரசிச்சு படிப்பேன்... என்னை அவ கவர்ந்ததே கவிதைகளாலதான்... எனக்கும் கவிதைகளில் ஈடுபாடு இருக்கு... ஆனா என் மனசுக்குள்ளிருந்த காதலை வெளிப்படுத்த அப்போ சந்தர்ப்பம் இல்லாமலே போயிடுச்சு... இயற்கையைப் பத்திதான் நிறைய கவிதை எழுதுவா... கவிதையில் உற்சாகம் நிரம்பி வழியும்... ஆனா கல்யாணத்துக்கப்புறமா வந்த அவளோட கவிதைகள் எல்லாமே வேற மாதிரி இருந்திச்சு... கணவனின் கொடுமைகளை எதிர்த்துப் போராடற உக்கிரமான கவிதைகளாகவே இருந்தது... அதனாலதான் இந்த மாறுதல் பத்தி அவகிட்டே லெட்டர் எழுதிக் கேட்டேன்... பதிலே இல்லை... நேரடியா சந்திக்க முயற்சி பண்ணினேன்... 'தயவு செய்து இந்த மாதிரி வர வேண்டாம்'ன்னு சொல்லிட்டா... அதுக்கப்புறம்தான் நிர்மலாங்கற பெண் எழுதற மாதிரி அவகிட்டே கம்யூனிகேட் பண்ண ஆரம்பிச்சேன்...''

''அவ எழுதின கவிதைகளை வெச்சே... அவளோட கணவன் கொடுமைப்படுத்தறான்னு யூகிச்சிகிட்டீங்களா...? இது நம்பற மாதிரி இல்லையே...?''

சிதம்பரநாதன் குறுக்கிட்டுக் கேட்டதும் - சட்டென்று மறுத்தலாய் தலையாட்டினான்.

''நான் அப்படிச் சொல்லலை ஸார்... கவிதைகளைப்

படிச்சதும் என் மனசுக்குள்ளே சந்தேக விதை விழுந்தது... அதை உறுதிப்படுத்திக்க அவகிட்டே நேரடியா பேசிப் பார்க்க முயற்சி பண்ணினேன்... அவ என்கிட்டே சரியா பேசலை... நிர்மலாங்கற பேரில் லெட்டர் எழுதி விஷயங்களைத் தெரிஞ்சிக்க முயற்சி செஞ்சேன்... அதுக்கும் அவ அசைஞ்சுக் கொடுக்கலை... ஏதேச்சையா அவளோட கிளாஸ்மேட்... கிளாஸ்மேட் மட்டுமில்லை... நெருக்கமான தோழி... உஷாவை சந்திக்கும் வாய்ப்பு கிடைச்சது... உஷாகிட்டே சௌம்யா மனம் விட்டுப் பேசுவா... உஷா மூலம்தான் விஷயங்களை நான் தெரிஞ்சிகிட்டேன்... சௌம்யாவுக்கு மறுவாழ்வு குடுக்க நான் தயாரா இருக்கேன்னு உஷாகிட்டே சொன்னதும் அவ ரொம்ப சந்தோஷப்பட்டா... உஷா இது சம்பந்தமா சந்தர்ப்பம் வாய்க்கறப்போ சௌம்யாகிட்டே பேசறேன்னு சொல்லியிருந்தா... அதுக்குள்ளே எல்லாமே பாழாயிடுச்சே..."

நீளமாய் வாசு சொல்லி முடிக்க - தயாநிதி சில விநாடிகள் மனசுக்குள் அசைபோட்டுவிட்டு நிமிர்ந்தார்.

"சௌம்யாவுக்கு மூணு பேரை விரட்டி விரட்டிக் கொல்ற அளவுக்கு உடம்பிலோ மனசிலோ வலு இல்லைன்னு லாயர் சிதம்பரநாதன் ஃபீல் பண்றார்..."

"சாது *மிரண்டால் காடு கொள்ளாதுங்கற பழமொழியை நீங்க கேள்விப்பட்டதில்லையா ஸார்...? எத்தனை நாள் தான் கோபம் மாதிரியான அடிப்படை உணர்ச்சிகளை அமுக்கி அமுக்கி வெக்க முடியும்...? ஒரு நாள் பெரிசா வெடிச்சே தீரும்... அந்த நாள் வந்திருக்கு... லாயரோட சந்தேகத்தில் அர்த்தமே இல்லைன்னு நான் ஃபீல் பண்றேன்... கொலைகளை நான்தான் செஞ்சேன்னு அவ ஒப்புதல் வாக்குமூலமே தந்துட்டாளே... பேப்பர்ல நான் படிச்சேன்..."

"இந்த துன்பங்களிலிருந்து சௌம்யாவுக்கு



விடுதலை வாங்கித் தர்றதுக்காக யாரோ கொலை செஞ்சிருக்காங்க... ஆனா தனக்காகத்தானே இந்தக் கொலைகள் செய்யப்பட்டிருக்குங்குற குற்ற உணர்ச்சியோட - எதிர்பாராத விதமா சௌம்யா பழியைத் தன் மேல போட்டுகிட்டிருக்கான்னு சிதம்பரநாதன் சொல்றார்..."

திடுக்கிட்ட பார்வையில் இருவரையும் பார்த்த வாசு மறுத்தலாய்த் தலையசைத்தான்.

"அர்த்தமில்லாத சந்தேகம்... அப்படி ஒருவேளை அந்த எக்ஸ் சௌம்யாவின் நன்மைக்காக கொலையை செஞ்சிருந்தா... இப்போ சௌம்யா போலீசில் மாட்டிகிட்டிருப்பதை வேடிக்கை பார்த்திட்டிருக்குமா அந்த சம் எக்ஸ்..."

"கணவன்... மற்றும் அவன் குடும்பத்தார் கிட்டே சிறைப்பட்டிருப்பதை விட இது எவ்வளவோ மேல்ன்னு நினைச்சிருக்கலாமே...? தவிர இப்போ அவ மனநிலை பாதிக்கப்பட்டிருக்கா... இந்த நிலைல சரண்டர் ஆனா வீண் குழப்பம் விளையலாம்ன்னு தயங்கிட்டிருக்கலாம் இல்லையா...?"

"நான் அப்படி நினைக்கலை ஸார்..."

சொன்னவன் இருவரையும் உற்றுப் பார்த்து நிதானமான குரலில் கேட்டான்.

"நீங்க... என் மேல சந்தேகப்படறீங்களா...?"

"சேச்சே... சௌம்யாவுக்குத் தெரிஞ்சவர்ங்கற முறையில் ஜஸ்ட் உங்ககிட்டே விசாரிக்கறோம்... அவ்வளவுதான்... தேங்க்யூ மிஸ்டர் வாசு... நாங்க வர்றோம்..."

அவனிடம் விடை பெற்று வெளியே வந்தார்கள்.

காரைத் தொட்டதும் - தயாநிதி சொன்னார்.

"நம்ம சந்தேக வட்டத்தில் இவன் சிக்கறான் சிதம்பரநாதன்... நிர்மலாங்கற பேரில் மறைஞ்சு இருந்து லெட்டர் போட்டிருக்கான்... லெட்டர்ல எழுதியிருந்த

வார்த்தைகளிலேயே நிறைய வன்முறை இருந்தது...''

''சௌம்யா காப்பாத்த நினைக்கற எக்ஸ் இவன் தானான்னு எப்படிக் கண்டு பிடிக்கறது...?''

''அதுக்கு ரெண்டு காரியம் செய்யணும்...'' என்றார் தயாநிதி.

# 8



**தனிமை சாபம் என்றார்கள்.**
**தவறு.**
**தகுந்த துணை**
**அமையாது போனால்**
**தனிமைதான் வரம்.**

காரில் போகப் போக சிதம்பரநாதன் மறுபடியும் கேட்டார்.

''வாசு விஷயமா ரெண்டு காரியம் செய்யணும்ன்னு சொன்னீங்களே... என்னென்ன...?''

''ஒண்ணு... அவனோட ஆக்டிவிட்டிஸைக் கண்காணிச்கப் பார்க்கறது...''

''அடுத்தது...?''

''சௌம்யாவோட நெருக்கமான ஃப்ரெண்ட் உஷாவைப் பார்த்து அந்தப் பொண்ணுகிட்டே இவனைப் பத்தி விசாரிக்கணும்...''

''அடடா... அப்படின்னா அந்தப் பொண்ணோட அட்ரசை வாசுகிட்டே கேட்டு வாங்கியிருந்திருக்கலாமே...?''

''உஷாவோட போன் நம்பர் என்கிட்டே இருக்கு...''



என்றார் தயாநிதி.

''உஷாவோட போன் நம்பர் உங்ககிட்டே இருக்கா...?''

''ஆமா... சௌம்யா வீட்டில் கைப்பற்றின பொருட்களில் அவனோட சின்ன டெலிபோன் டைரியும் ஒண்ணு... அந்த டைரியில் உஷாவின் போன் நம்பர் இருக்கு...''

''எப்படி இவ்வளவு ஞாபகமா சொல்றீங்க...?''

''கொலை நடந்த வீட்டில் அந்தப் பொண்ணுதான் முன்னால நின்று எல்லா காரியங்களிலும் உதவி செஞ்சிட்டிருந்தா... யார் இந்தப் பொண்ணுன்னு கேட்டப்போ 'சௌம்யாவின் தோழி'ன்னு சொன்னாங்க... டெலிபோன் டைரியைப் புரட்டறப்போ அவனோட பேர் இருந்ததைப் பார்த்தேன்... அதனால மனசுல பதிஞ்சு போச்சு...''

சொன்ன தயாநிதி அவருடைய அனுமதியைக் கேட்டுக் கொண்டே செல்லுலர் போனைக் கையிலெடுத்தார்.

''இஃப் யு டோன்ட் மைண்ட் - நான் இந்த செல்போனை உபயோகிச்சிக்கலாமா...?''

''எடுத்துக்கங்க... ப்ளீஸ்...''

தயாநிதி அந்த கையடக்க போனில் எண்களை அழுத்தினார்.

சொற்ப விநாடிகள் ரிங் போன பிறகு ரிசீவர் எடுக்கப்பட - பேச ஆரம்பித்தார்.

''நான் தயாநிதி பேசறேன்...''

மறுமுனையிலிருந்து ஒரு கான்ஸ்டபிளின் பவ்யமான குரல் வந்தது.

''சொல்லுங்க ஸார்...''

''ஸ்டேஷனுக்கு இம்பார்ட்டெண்ட் கால்ஸ் ஏதாவது வந்ததா...?''

''இல்லை ஸார்...''

''சௌம்யா வீட்டிலிருந்து கைப்பற்றின

பொருட்களில் பாக்கெட்டில் வெச்சிக்கற மாதிரியான சின்ன டெலிபோன் டைரி ஒண்ணு இருக்கு... ரைட்டர்கிட்டே கேட்டீங்கன்னா எடுத்துக்குடுப்பார்... அதிலே உஷாங்கற பொண்ணோட போன் நம்பரும் அட்ரஸூம் இருக்கும்... கொஞ்சம் அதைப் பார்த்துச் சொல்லுங்க...''

''ஒரு நிமிஷம் ஸார்...''

சொற்ப நேரம் காத்திருந்த பிறகு கான்ஸ்டபிளின் குரல் திரும்பக் கேட்டது.

''சொல்றேன் குறிச்சிக்கறீங்களா ஸார்...?''

''சொல்லுங்க...''

பால் பாயிண்ட் பேனாவை பாக்கெட் நோட்டில் நகர்த்தி அவர் சொல்லச் சொல்ல குறித்துக் கொள்ள ஆரம்பித்தார் தயாநிதி.

பேசி முடித்த பின் போனை அணைத்தார்.

சிதம்பரநாதன் சொன்னார்.

''உஷாவுக்கும் போன் பண்ணுங்க இன்ஸ்பெக்டர்...''

''வேண்டாம்... திடீர்னு போனாத்தான் விசாரணைக்கான பதில்கள் சரியாக் கிடைக்கும். முன்கூட்டியே சொல்லிட்டுப் போனா... என்ன கேள்வி கேட்டா என்ன பதில் சொல்லலாம்ன்னு மனசுக்குள்ளே அசை போட ஆரம்பிச்சிடுவாங்க...''

''நீங்க சொல்றது சரிதான்...''

''அதனாலதான் வாசுகிட்டே என்கொயரி பண்ணினப்போகூட உஷாவோட போன் நம்பரோ அட்ரசோ அவன்கிட்டே கேக்கலை... அப்படிக் கேட்டிருந்தா நாம அங்கே போய் விசாரிப்போம்ன்னு அவன் யூகிச்சுக்குவான்... உடனடியா உஷாவுக்கு போன் அடிச்சு... 'என்னைப் பத்தி போலீஸ் கேட்டாங்கன்னா நல்லவிதமா சொல்லிடு'ன்னு வாக சொல்லிவெச்சிடுவான்...''

''ஐ அக்ரி... உஷாவோட அட்ரசைச் சொல்லுங்க... நேரா அங்கேயே போயிடுவோம்...''



தயாநிதி சொன்ன வழிகளில் கார் விரைய ஆரம்பித்தது.

பதினைந்து நிமிஷப் பிரயாணத்தின் முடிவில் அந்த ஹவுசிங் காம்ப்ளக்சைத் தொட்டார்கள்.

முன்புறம் இருந்த குறுகலான இடப்பரப்பில் சிரமப்பட்டு காரை பார்க் செய்துவிட்டு உள்ளே சென்றார்கள்.

வலது புறம் படிக்கட்டு சுழன்று சுழன்று மேலே சென்று கொண்டிருக்க - இடது புறம் லிஃப்ட் தெரிந்தது. சிவப்பு எல் ஈ டி மூன்றாவது ஃப்ளோரில் லிஃப்ட் நின்று கொண்டிருப்பதைச் சொல்லிக் கொண்டிருந்தது.

பொத்தானை அழுத்தினார் தயாநிதி.

எண்கள் குறைய ஆரம்பித்தன.

க்ரௌண்ட் ப்ளோரைத் தொட்ட லிஃப்டின் கதவுகள் பிளக்க - உள்ளே நுழைந்து ஊஞ்சலாடி நான்காம் தளத்தை அடைந்தார்கள்.

''ஃப்ளாட் நம்பர் என்ன இன்ஸ்பெக்டர்...?''

''ஃபோர் நாட் செவன்...''

அந்தக் கதவு இலக்கத்தை அடைந்து காலிங் பெல் சுவிட்சை அழுத்தினார்கள்.

''டிடிங்.''

உள்ளே ஒலிப்பது அசரீரியாய் வெளியே கேட்டது.

''டிடிங்.''

''டிடிங்.''

''டிடிங்.''

உள்ளே பெல் சத்தத்தைத் தவிர வேறு எந்தச் சலனமும் இல்லை.

''யாரும் இல்லை போலிருக்கு...''

சிதம்பரநாதன் சொன்ன விநாடி.

வராந்தாவில் சென்று கொண்டிருந்த காக்கி உடை அணிந்த ஃப்ளாட் வாட்ச்மேன் அவர்களை நெருங்கி வந்து சொன்னான்.

''உஷாம்மாவைப் பார்க்கவா வந்தீங்க...?''

''ஆமா...''

''அவங்க இல்லை ஸார்... ஏதாவது தகவல் இருந்தா என்கிட்டே சொல்லிடுங்க... அவங்க வந்த பின்னாடி நான் அவங்ககிட்டே சொல்லிடறேன்...''

''எப்போ வருவாங்க...?''

வெளியூர் போயிருக்காங்க... எப்போ வருவாங்கன்னு எனக்குத் தெரியாது...''

''வெளியூருக்கு எப்போ போனாங்க...?''

''நாலு நாளாச்சு...''

''எந்த ஊருக்குப் போயிருக்காங்க...?''

''அந்த விபரமெல்லாம் எனக்குத் தெரியலை ஸார்...''

''வீட்டில் வேற யாரும் இல்லையா...?''

''உஷாம்மா மட்டும் தனியாத்தான் இருக்காங்க...''

''இன்னும் அவங்களுக்கு கல்யாணம் ஆகலையா...?''

''ஆயிடுச்சுங்க... இது அவங்க புருஷன் வீடுதான்...''

''அவர் எங்கே இருக்கார்...?''

''பாவம் நல்லா இருந்த மனுஷன் செத்துப் போயிட்டார்...''

''உஷா விடோவா...?''

''ஆமா... ஆனா பார்த்தா தெரியாது... பூ வெச்சிப்பாங்க... பொட்டு வெச்சிப்பாங்க...''

''உஷாவோட கணவர் எப்படி செத்தார்ன்னு தெரியுமா...?''

''நல்லாதான் இருந்தார்... வைரஸ் காய்ச்சல் வந்து ஆஸ்பத்திரில ஒரு மாசம் படுத்திருந்தார்... திடீர்ன்னு ஒரு நாள் உயிரை விட்டுட்டார்...''

''சரி... உஷா வந்தா இந்த நம்பர்க்கு கட்டாயம் போன் பண்ணச் சொல்லு...''

''ஆகட்டும் ஸார்...''

தயாநிதி கொடுத்த டெலிபோன் நம்பரை பாக்கெட்டில் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டான் அந்த வாட்ச்மேன்.



மீண்டும் லிஃப்ட்டில் பயணித்து கீழே வந்தார்கள். காரை நெருங்கும்போது சிதம்பரநாதன் சொன்னார்.

''வாசுவைப் பத்தி விசாரிக்கலாம்ன்னா ஆரம்பத்திலேயே இடைஞ்சல்... அவனைப் பத்தி வேற யார்கிட்டே கேக்கலாம்...?''

''யார்கிட்டேயும் கேக்க வேண்டாம்... உஷாகிட்டேயே கேட்டுக்கலாம்...''

''அவதான் வெளியூர் போயிருக்காளே... எப்போ வருவாள்ன்னும் தெரியாது... நமக்கு கோர்ட் கொடுத்திருக்கற கால அவகாசம் ஒரு வாரம்தான் இன்ஸ்பெக்டர்...''

''ஸோ வாட்...?''

சொன்ன தயாநிதியின் குரலில் லேசான உற்சாகம் இருப்பதைக் கவனித்தார் சிதம்பரநாதன்.

காருக்குள் அமர்ந்து இக்னிஷியன் துவாரத்தில் சாவியை நுழைத்துக் கொண்டே கேட்டார்.

''என்ன இன்ஸ்பெக்டர்... 'ஸோ வாட்'ன்னு சாதாரணமா சொல்றீங்க? சௌம்யா கொலையாளி இல்லைன்னு நிரூபிக்க வேண்டிய பொறுப்பை தலையில் சுமந்துகிட்டிருக்கறவன் நான்தான்... இந்த முயற்சி காயானாலும் பழமானாலும் உங்களுக்குக் கவலை இல்லைங்கற உற்சாகமா...?''

''நான் அப்படி நினைச்சிருந்தா உங்க கூட மெனக்கெட்டு இப்படி சுத்திட்டிருப்பேனா...? உண்மையான குற்றவாளியைக் கண்டு பிடிக்கறதில்தானே ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரின் திறமை இருக்கு... கிடைக்கற சந்தர்ப்ப சாட்சியங்களை வெச்சு மாட்டின ஆளை உள்ளே தள்ளி கேஸை முடிக்கறது இந்தப் பதவிக்கே அவமானம்...''

இக்னிஷியனைத் திருகப் போன சிதம்பரநாதனை சட்டென்று தடுத்தார் தயாநிதி.

''ஒரு நிமிஷம் சிதம்பரநாதன்... காரை ஸ்டார்ட் பண்ண வேண்டாம்...''

''ஏன்...?''

''உஷாவைப் பார்க்காம நாம இங்கிருந்து போகப் போறதில்லை...''

''வாட் டு யூ மீன்...? அவ வெளியூரிலிருந்து எப்போ வருவாள்ன்னு தெரியாதே...?''

''அவ வெளியூருக்கே போகலை...''

''பின்னே...?''

''ஃப்ளாட்டுக்குள்ளேயேதான் இருக்கா...''

தயாநிதி சொல்ல, முகம் நிறையத் திகைப்பைக் காட்டி நிமிர்ந்தார் சிதம்பரநாதன்.

''என்ன சொல்றீங்க இன்ஸ்பெக்டர்...?''

''உஷா ஃப்ளாட்டுக்குள்ளேதான் இருக்கா... ஆனா நாம வந்திருக்கோம்ன்னு தெரிஞ்சிட்டு வாட்ச்மேனை விட்டுப் பொய் சொல்லி இருக்கா...''

''நாம திடீர்ன்னுதானே வந்தோம். நாம வர்றது முன்கூட்டியே தெரிஞ்சிருந்தா இப்படி ஒரு பொய்யைச் சொல்ல ஏற்பாடு செஞ்சிருக்கலாம்ன்னு சொல்லலாம்...''

''நாம காலிங் பெல் அடிச்சதுக்கப்புறம் மேஜிக் ஐ வழியா நம்மைப் பார்த்திருக்கா உஷா...''

''ஃப்ளாட்டுக்கு பின் பக்க வழி எதுவும் இருக்கிற மாதிரித் தெரியலையே...? அதுக்கப்புறம் எப்படி வாட்ச்மேனை அவ பார்த்து இப்படி ஒரு பொய்யைச் சொல்ல சொல்லியிருக்க முடியும்...?''

''வாட்ச்மேனை காண்ட்டாக்ட் பண்ண இன்டர்காம் இருந்திருக்கும் சிதம்பரநாதன்...''

''இதையெல்லாம் நீங்க யூகிக்கறீங்களா...?''

''வெறும் யூகம் இல்லை... உள்ளே ஆள் இருந்ததை நான் உறுதிப்படுத்திகிட்டேன்...''

''எப்படி...?''

''நாம முதல் பெல் குடுத்ததுமே கதவின் கீழே இருக்கிற மெல்லிய இடுக்கில் லேசா ஒரு நிழலாடினதைக் கவனிச்சேன்... அதாவது உஷா



கதவுகிட்டே வந்து 'மேஜிக் ஐ' வழியா நம்மைப் பார்த்திருக்கா... அதுக்கப்புறம்தான் நம்மைச் சந்திப்பதைத் தவிர்ப்பதற்காக வாட்ச்மேன்க்கு இன்டர்காம் அடிச்சு அவனைப் பொய் சொல்லச் சொல்லியிருக்கா...''

''அந்த நிழல் உஷாதான்ங்கறது உங்க யூகம்...?''

''வீட்டில் அவளைத் தவிர யாருமில்லைன்னு வாட்ச்மேன் சொன்னானே...''

''அவ ஏன் பொய் சொல்லி நம்மை சந்திப்பதைத் தவிர்க்கணும்...?''

''அவ கிட்டே ஏதோ தப்பு இருக்கு... அதான் நம்மை சந்திப்பதைத் தவிர்த்திட்டா... என்ன தப்பு இருக்குன்னு நாம கண்டு பிடிக்கணும்...''

''இப்போ வாட்ச்மேனை மடக்கி விசாரிச்சா உண்மை வெளியே வராதா...?''

''உறுதிப்படுத்திக்காம நாம பலாத்கார விசாரணைகளில் இறங்கினா அது நமக்கு பாதகமா அமைஞ்சிடும்... ஃப்ளாட்ல அசோசியேஷன் இருக்கும்... அதைக் கூட்டி சமாளிச்சுடுவாங்க... உள்ளே வேலைக்காரி இருந்தா... அப்படி இப்படின்னு எதையாவது சொல்லி வாட்ச்மேனும் சமாளிச்சுடுவான்... உள்ளே இருப்பது உஷாதான்னு உறுதி ஆயிடுச்சின்னா அதிரடியா இறங்கிடலாம்...''

''எப்படி உறுதிப்படுத்திக்கறது...?''

''பொறுமையா காத்திருக்கணும். நம்மகிட்டே பொய் சொல்லிட்டு உள்ளே இருக்கற உஷா ரொம்ப நேரத்துக்கு உள்ளேயே இருக்க மாட்டாள்ங்கறது என்னோட எண்ணம்... அவ வெளியே வந்தா நாம விஷயத்தை கன்பர்ம் பண்ணிக்கலாம்...''

''அப்படின்னா காரைக் கொஞ்சம் அந்தப் பக்கமா நிறுத்திக்கலாம் இன்ஸ்பெக்டர்... கார் கிளம்பிப் போனதுக்கப்புறமா வரலாம்ன்னு அவ நினைக்கலாம் இல்லையா...?''

''நீங்க சொல்றதும் சரிதான்...''

காரை உயிர்ப்பித்து சற்றுத் தள்ளி இருந்த தெருவின் விளிம்பில் நிறுத்திக் கொண்டார்கள்.

அந்த இடத்திலிருந்து ஹவுசிங் காம்ப்ளக்சைப் பார்க்க முடியும். ஆனால் ஹவுசிங் காம்ப்ளக்சிலிருந்து கார் பார்வைக்குக் கிடைக்காது.

கிட்டத்தட்ட நாற்பது நிமிஷத்திற்குப் பின் காம்ப்ளக்ஸ் வாசலுக்கு ஒரு ஆட்டோ வந்து நின்றது.

ஆட்டோ வந்து நின்ற சொற்ப நிமிஷங்களில் ஒரு பெரிய சூட்கேசோடு உஷா வெளியே வந்து ஆட்டோவின் பின் சீட்டில் நிரம்பினாள்.

தயாநிதி பரபரத்தார்.

''நம்ம யூகம் சரியாயிடுச்சு சிதம்பரநாதன்... ஆட்டோவில் ஏறுகிறாளே... அந்தப் பொண்ணுதான் உஷா... டூ ஒன் திங்... அவளை ஃபாலோ பண்ணிப் போங்க... அதுக்குள்ளே நான் அவ வீட்டை சர்ச் பண்ணிட்டு உங்க செல்போனை காண்ட்டாக்ட் பண்றேன்...''

சிதம்பரநாதன் தலையசைத்தார்.

''ஓ.கே...''

தயாநிதி கீழே இறங்கிக் கொள்ள -

என்ஜின் கத்தலோடு புறப்பட்டுச் சென்ற ஆட்டோவை சிதம்பரநாதனின் கார் பின் தொடர ஆரம்பித்தது.

தயாநிதி நேராக ஃப்ளாட் வாட்ச்மேனின் மரக் கூண்டை நெருங்கினார்.

மறுபடியும் அவரைப் பார்த்ததும் வெலவெலத்துப் போன வாட்ச்மேன் மனசுக்குள் இருக்கும் நடுக்கத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இயல்பான குரலில் பேச முயற்சித்தான்.

''என்ன ஸார்... மறுபடியும் வந்திருக்கீங்க...?''

''நான் போகவேயில்லையே...''

''நீ... நீங்க... போகவேயில்லையா...?''



''ஆமா...'' என்று சொல்லித் தலையசைத்துக் கொண்டே தொடர்ந்து உறுமினார் தயாநிதி.

''சொல்லு... எதுக்காகப் பொய் சொன்னே...? உஷா வெளியூர் போயிருக்காள்ன்னு எதுக்காக பொய் சொன்னே...?''

அவருடைய உறுமலில் அரண்டு போனான்.

''உ... உஷாம்மாதான் அப்படிப் பொய் சொல்லச் சொன்னாங்க ஸார்...''

''என்னன்னு சொன்னாங்க...?''

'' 'ஆபீஸ் வேலையை வீட்டுக்கு எடுத்துட்டு வந்து பண்ணிட்டிருக்கேன்... என்னைத் தேடி யாரோ வந்திருக்காங்க போலிருக்கு... அவங்க கிட்டே பேசிட்டிருந்தா என்னால வேலையை முடிக்க முடியாது... நான் வெளியூர் போயிருக்கேன்னு பொய் சொல்லி அவங்களை அனுப்பிடு'ன்னு இண்டர்காம்ல சொன்னாங்க ஸார்... அதனாலதான் நான் மேல வந்தேன்... இன்ஸ்பெக்டர் டிரஸ்ஸைப் பார்த்ததும் மனசுக்குள்ளே சுறுக்குன்னுதான் இருந்தது... ஆனாலும் உஷாம்மாவுக்கு தெரிஞ்சவங்களா இருக்கலாம்ன்னு நினைச்சிட்டுத்தான் நான் அவங்க சொன்ன மாதிரியே சொல்லிட்டேன்...''

''அவங்க ஃப்ரெண்டோட வீட்டில் நடந்த கொலைகள் தொடர்பா விசாரிக்கறதுக்காகத்தான் நாங்க வந்திருந்தோம்... உனக்குத் தெரிஞ்ச உண்மைகளை நீ பளிச்சுன்னு சொல்லிடு... இல்லைன்னா கொலைக்கு உடந்தையா இருந்தேன்னு உன்னையும் உள்ளே தள்ளிடுவேன்...''

அவன் நடுங்கிப் போய்ப் பதறினான்.

''ஸ... ஸார்... அவங்க வெளியூர் போயிருக்காங்கன்னு பொய் சொன்னதைத் தவிர எனக்கு வேற எதுவும் தெரியாது ஸார்...''

''வேற யார்கிட்டேயாவது இப்படிப் பொய் சொல்லச் சொல்லியிருக்காங்களா...?''

''இ... இல்லை ஸார்...''

''அந்த ஃப்ளாட்டுக்கு மாத்து சாவி இருக்கா...?''

''இல்லை...''

''ஸ்க்ரூ டிரைவர் வெச்சிருக்கியா...?''

''கிட் இருக்கு ஸார்...''

''எடுத்துட்டு என்கூட வா...''

அடுத்த நிமிஷம் லிஃப்ட்டில் உயர்ந்தார்கள்.

உஷாவின் ஃப்ளாட் கதவை நெருங்கியதும் தயாநிதி கிட்டிலிருந்த சிறிய அளவு ஸ்க்ரூ டிரைவர்கள் சிலவற்றை சாவித்துவாரத்தில் உபயோகித்தார்.

ஐந்து நிமிஷப் போராட்டத்தின் முடிவில் டோர் ஸ்க்ரூடிரைவரின் லாவகமான நெம்பல்களுக்குக் கீழ்ப்படிந்தது.

உள்ளே பிரவேசித்தார் தயாநிதி.

பெரிய ஹால்.

அதன் விஸ்தீரணத்தை மறைக்கிற மாதிரி 'ப' வடிவ சோபாக்கள், கலர் டி.வி., பெரிய ஸ்பீக்கர்களுடன் ஆடியோ எக்விப்மெண்ட் என்று ஹால் நிறைந்திருந்தது.

அடுத்த அரை மணி நேரம் தயாநிதியின் லேசர் பார்வைக்கு ஃப்ளாட்டின் ஒவ்வொரு சதுர மி.மீ. பரப்பும் உட்பட்டது.

படுக்கையின் அடியில் கிடைத்த செல்வக சைஸ் டைரியைப் புரட்டப் புரட்ட தயாநிதிக்குள் பரபரப்பு அரும்ப ஆரம்பித்தது.

சௌம்யா அவள் வீட்டில் நடக்கும் கொடுமைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் இவளிடம் மனம் விட்டுப் பேசியிருக்கிறாள் என்பதை டைரியிலிருந்த வரிகள் சொல்லிக் கொண்டே வந்தன.

அதற்கு உஷாவின் ரியாக்ஷன்களும் ஒவ்வொரு பக்கத்திலும் தெரிந்தன.

''இந்த மாதிரி ஆட்களை நடுரோட்டில் நிற்க வைத்துக் கல்லால் அடித்துக் கொல்ல



வேண்டும்...''

''கதறக் கதற தூக்கில் போடவேண்டும்...''

''நிற்க வைத்துக் குருவியைச் சுடுகிற மாதிரி சுட வேண்டும்...''

''ஒருமுறை அல்ல... நூறுமுறை சாகடிக்க வேண்டும்...''

''இத்தனை கொடுமைகளுக்குப் பிறகும் சௌம்யா ஏன் பொறுத்துப் பொறுத்துப் போய்க் கொண்டிருக்கிறாள்...?''

டைரியின் பல பக்கங்களில் ஆத்திரத்தோடு பொருமியிருந்தாள் உஷா.

'அவனிடம் தவறு இருந்ததால்தான் சந்திப்பதைத் தவிர்த்துவிட்டு தப்பிச் சென்றிருக்கிறாள்.'

'அவன் தப்பக்கூடாது.'

யோசித்துக் கொண்டே டைரியைப் புரட்டியவர், அதன் கடைசி பக்கத்தில் எழுதியிருந்த வார்த்தைகளைப் பார்த்து திடுக்கிட்டார்.

மதிப்புக்குரிய இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு...

என் வீட்டை நீங்கள் சோதனை போடுவீர்கள் என்று எனக்குத் தெரியும். அந்தக் கொலைகளை நான்தான் செய்தேன். ஆனால் இதைப் படிக்கும்போது நீங்கள் பிடிக்க முடியாத இடத்தில் நான் இருப்பேன்.

இப்படிக்கு,
உஷா.

தயாநிதியின் பரபரப்பு உச்சத்துக்குப் போக - அங்கிருந்த டெலிபோன் ரிசீவரை எடுத்து சிதம்பரநாதன் செல்போன் எண்களைச் சுழற்ற ஆரம்பித்தார்.

சொற்ப விநாடிகளுக்குப் பின் மறுமுனையில் சிதம்பரநாதனின் ''ஹலோ...'' கேட்டது.

''நான் தயாநிதி பேசறேன்,..''

''சொல்லுங்க இன்ஸ்பெக்டர்...''

''உஷா இப்போ எங்கே இருக்கா...?''

''அவ நேரா ரயில்வே ஸ்டேஷன் வந்திருக்கா... ப்பாம்பே போற ரயில்ல ஏறி உக்காந்திருக்கா...''

''ட்ரெயின் எத்தனை மணிக்கு...''

''இன்னும் பதினைஞ்சு நிமிஷம் இருக்கு... உங்க போன் காலைத்தான் ஒவ்வொரு நிமிஷமும் நான் எதிர்பார்த்துட்டிருந்தேன்...''

''அவ தனியாத்தான் இருக்காளா...? இல்லை கூட யாராவது இருக்காங்களா...?''

''அவ மட்டும்தான் இன்ஸ்பெக்டர்...''

''அவதான் கொலைகளை செஞ்சிருக்கா சிதம்பரநாதன்... நீங்க ரயில்வே போலீஸ்கிட்டே போங்க... அவங்ககிட்டே விஷயத்தைச் சொல்லி அவளை மடக்கி வைங்க... நான் சிக்கிரமா வந்துடறேன்...''

''ஓ.கே. இன்ஸ்பெக்டர்...''

தயாநிதி அங்கிருந்து வேகமாய் அகன்றார்.

## 9



பிறந்ததிலிருந்து தந்தையின்
முகவரிதான் என் முகவரி.
எனக்கென்று ஒரு தனி முகவரி
வேண்டுமென்று நான்
யோசித்ததில்லை.
இப்போது உன் முகவரி என் முகவரி ஆன பின்பு
அப்படி யோசிக்க வைக்கிறாய்.
சுதந்திரத்தை நினைவூட்டியதற்கு நன்றி.

கோர்ட்டின் நிசப்தத்தில் கூண்டில் நின்றிருந்த



உஷாவின் குரல் மட்டும் மெலிதாய் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

''சௌம்யா ஆரம்பத்திலிருந்தே என் ஒருத்திகிட்டேதான் மனசுவிட்டுப் பேசுவா.... அவங்க வீட்டில் நடந்த எல்லா கொடுமைகளையும் ஒண்ணு விடாம என்கிட்டே சொல்லியிருக்கா... அப்போதெல்லாம் நான் சொல்லியிருக்கேன்... 'நீ ஏன் பொறுத்துப் போகணும்...? வெட்டிட்டு வந்துடு... புருஷன் செத்துப் போனதால நான் தனியா வாழலையா...'ன்னு. பிரிஞ்சு வர அவளுக்கு அட்வைஸ் பண்ணுவேன்... ஆனா சௌம்யா கேக்கலை... 'அப்பாவுக்கும், அண்ணனுக்கும் இதெல்லாம் தெரிஞ்சா ரொம்ப மனசு விட்டுடுவாங்க... அவங்க சந்தோஷத்தைக் கெடுக்க வேண்டாம்ன்னுதான் நான் பொறுத்துப் போறேன்'னு திரும்பத் திரும்ப சொல்லிட்டிருந்தா... பொறுமைக்கும் எல்லை உண்டு... அவங்களோட கொடுமைகள் எல்லை மீறிப் போக ஆரம்பிச்ச நிலையில்தான் காலேஜில் எங்களுக்கு சீனியரான வாசுவை சந்திக்க நேர்ந்தது... சௌம்யாவின் நிலைமையைக் கேள்விப்பட்டு அவர் அவளுக்கு வாழ்வு தர முன் வந்தார்... ஆனா சௌம்யா ஒத்துக்கலை... 'ஊர் உலகம் அசிங்கமா பேசும்... அப்பா அண்ணா மனசு விட்டுடுவாங்க...' இப்படியே சொல்லிட்டிருந்தா... அவங்க மூணு பேரையும் தீர்த்துக் கட்டினாத்தான் இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் முடிவு கட்ட முடியும்... வாசுவை அவ ஏத்துக்கவும் வழி பிறக்கும்ன்னு நான் முடிவு செஞ்சேன்... அன்னிக்கு அதிகாலைல திட்டமிட்டு அவங்க மூணுபேரையும் கதறக் கதற கொலை செஞ்சேன்... எதிர் வீட்டிலும் பக்கத்து வீட்டிலும் இருந்து கொலையைப் பார்த்தவங்க என்னைத்தான் பார்த்திருக்காங்க... ஆனா வீட்டிலிருக்கும் ஒரே பொண்ணு சௌம்யாதானே... அதனாலே அந்த மங்கல் வெளிச்சத்தில் என்னை

சௌம்யான்னு நினைச்சிட்டாங்க... பின்னாடி வழியா நான் தப்பிச்சுப்போயிட்டேன்... ஆனா நான் கொலை செய்யப் பயன்படுத்திய அரிவாளை எடுத்துகிட்டு சௌம்யா தன் மேலேயே பழியைப் போட்டுக்குவான்னு நான் நினைக்கவேயில்லை. அதுக்கப்புறம் என்ன செய்யறதுன்னு தெரியாம யோசிச்சிட்டிருந்தேன்... போலீஸில் மாட்டிக்க எனக்கு மனசில்லை... இன்ஸ்பெக்டர் என்னோட வீடு தேடி வந்தப்போ எனக்கு பயமாயிடுச்சு... வாட்ச்மேன் மூலமா பொய் சொல்லி அவங்களை அனுப்பிட்டு நான் தப்பிச்சு பாம்பே போக முயற்சி செஞ்சேன்... சௌம்யாவைக் காப்பாத்தறதுக்காக விட்டில் டைரியில் என் கைப்பட குற்றத்தை ஒத்துக்கிட்டேன்... அவ்வளவு பெரிய பம்பாயில் என்னை போலீஸ் தேடிக் கண்டுபிடிக்க முடியாதுங்கற தைரியத்தோட கிளம்பிப் போனேன்... ஆனா... இன்ஸ்பெக்டர் தயாநிதியும், லாயர் சிதம்பரநாதனும் சேர்ந்து ரயில்வே ஸ்டேஷனிலேயே என்னை மடக்கிப் பிடிச்சிட்டாங்க...''

உஷா நீளமாய்க் கோர்ட்டில் வாக்குமூலம் சொல்லி முடிக்க - ஜட்ஜ் தடித்த பேனாவால் அவ்வப்போது குறிப்பெடுத்துக் கொண்டு - ''தீர்ப்பை வரும் நான்காம் தேதிக்கு ஒத்தி வைக்கிறேன்...'' என்றார்.

சிதம்பரநாதனின் அலுவலகம்.

சௌம்யா, சீனிவாசன், ராகுல், வாசு ஆகியோர் சிதம்பரநாதனுக்கு எதிரே அமர்ந்திருந்தார்கள்.

சீனிவாசனும், ராகுலும் கையெடுத்துக் கும்பிட்டு குரல் தழுதழுத்தார்கள்.

''லாயர் ஸார்... தெய்வத்தை நாங்க இதுவரைக்கும் கண்ணால பார்த்ததில்லை... இப்ப உங்களைத்தான் தெய்வமா பார்க்கறோம்... சௌம்யாவுக்கு விடுதலை வாங்கித் தந்துட்டீங்க... சீக்கிரம் அவளுக்கு குணமாயிடுச்சுன்னா அவளோட குழந்தை



சந்தோஷப்படும்...''

''டாக்டர் வில்சன் கிட்டேயே தொடர்ந்து ட்ரீட்மெண்ட் எடுங்க... அவர் எனக்கும் தெரிஞ்சவர்தான்... நிச்சயமா குணப்படுத்திடுவார். வாசு சௌம்யாவை ஏத்துக்கத் தயாரா இருக்கார்... அதனால நீங்க கவலைப்பட இனிமே எதுவுமே இல்லை...''

வாசு குறுக்கிட்டுச் சொன்னான்.

''நான் ஏத்துக்க தயாரா இருக்கேன்... ஆனா சௌம்யாவோட மனநிலை சரியாகணும்...''

''என்ன சொல்றீங்க வாசு...?''

''என்னை யாரும் தப்பா நினைக்க வேண்டாம்... சௌம்யாவோட முழு சம்மதம் இல்லாம அவளைக் கைப்பிடிக்கறது அவளுக்கு செய்யற துரோகம்... அது தப்பு... அதனாலதான் அவளோட மனநிலை முதலில் சரியாகணும்ன்னு சொல்றேன்... ஆனா அதுவரைக்கும் ஒரு நர்சுக்கு சமமா அவளையும் அவள் குழந்தையையும் பார்த்துக்க நான் தயாராய்த்தான் இருக்கேன்...''

''லாயர் ஸார்..! வாசு..! உங்க ரெண்டு பேர்க்குமே நாங்க நிறைய கடமைப்பட்டிருக்கோம்...''

அவர்கள் விடை பெற்றுச் சென்ற சில நிமிஷங்களில் ரிசப்ஷனிஸ்ட் இண்டர்காமில் கூப்பிட்டாள்.

''சொல்லும்மா...''

''இளங்கோ ஸார் வந்திருக்கார்...''

''வரச் சொல்லு...''

இண்டர்காம் ரிசீவரை வைத்துவிட்டு நிமிர்ந்தபோது - கதவின் கைப்பிடி கீழே இறங்கி திறந்த கதவில் இளங்கோ தோன்றினார்.

''வாங்க இளங்கோ... உக்காருங்க...''

எதிர் இருக்கையில் உட்கார்ந்து கொண்டே இளங்கோ சொன்னார்.

''நான் தோல்வியை ஒத்துக்கறேன் சிதம்பரநாதன்... இந்தாங்க...''

கார் சாவியை நீட்டினார்.

சௌம்யான்னு நினைச்சிட்டாங்க... பின்னாடி வழியா நான் தப்பிச்சுப்போயிட்டேன்... ஆனா நான் கொலை செய்யப் பயன்படுத்திய அரிவாளை எடுத்துகிட்டு சௌம்யா தன் மேலேயே பழியைப் போட்டுக்குவாள்ன்னு நான் நினைக்கவேயில்லை. அதுக்கப்புறம் என்ன செய்யறதுன்னு தெரியாம யோசிச்சிட்டிருந்தேன்... போலீஸில் மாட்டிக்க எனக்கு மனசில்லை... இன்ஸ்பெக்டர் என்னோட வீடு தேடி வந்தப்போ எனக்கு பயமாயிடுச்சு... வாட்ச்மேன் மூலமா பொய் சொல்லி அவங்களை அனுப்பிட்டு நான் தப்பிச்சு பாம்பே போக முயற்சி செஞ்சேன்... சௌம்யாவைக் காப்பாத்தறதுக்காக வீட்டில் டைரியில் என் கைப்பட குற்றத்தை ஒத்துக்கிட்டேன்... அவ்வளவு பெரிய பம்பாயில் என்னை போலீஸ் தேடிக் கண்டுபிடிக்க முடியாதுங்கற தைரியத்தோட கிளம்பிப் போனேன்... ஆனா... இன்ஸ்பெக்டர் தயாநிதியும், லாயர் சிதம்பரநாதனும் சேர்ந்து ரயில்வே ஸ்டேஷனிலேயே என்னை மடக்கிப் பிடிச்சிட்டாங்க...''

உஷா நீளமாய்க் கோர்ட்டில் வாக்குமூலம் சொல்லி முடிக்க - ஜட்ஜ் தடித்த பேனாவால் அவ்வப்போது குறிப்பெடுத்துக் கொண்டு - ''தீர்ப்பை வரும் நான்காம் தேதிக்கு ஒத்தி வைக்கிறேன்...'' என்றார்.

சிதம்பரநாதனின் அலுவலகம்.

சௌம்யா, சீனிவாசன், ராகுல், வாசு ஆகியோர் சிதம்பரநாதனுக்கு எதிரே அமர்ந்திருந்தார்கள்.

சீனிவாசனும், ராகுலும் கையெடுத்துக் கும்பிட்டு குரல் தழுதழுத்தார்கள்.

''லாயர் ஸார்... தெய்வத்தை நாங்க இதுவரைக்கும் கண்ணால பார்த்ததில்லை... இப்ப உங்களைத்தான் தெய்வமா பார்க்கறோம்... சௌம்யாவுக்கு விடுதலை வாங்கித் தந்துட்டீங்க... சீக்கிரம் அவளுக்கு குணமாயிடுச்சுன்னா அவளோட குழந்தை



சந்தோஷப்படும்...''

''டாக்டர் வில்சன் கிட்டேயே தொடர்ந்து ட்ரீட்மென்ட் எடுங்க... அவர் எனக்கும் தெரிஞ்சவர்தான்... நிச்சயமா குணப்படுத்திடுவார். வாசு சௌம்யாவை ஏத்துக்கத் தயாரா இருக்கார்... அதனால நீங்க கவலைப்பட இனிமே எதுவுமே இல்லை...''

வாசு குறுக்கிட்டுச் சொன்னான்.

''நான் ஏத்துக்க தயாரா இருக்கேன்... ஆனா சௌம்யாவோட மனநிலை சரியாகணும்...''

''என்ன சொல்றீங்க வாசு...?''

''என்னை யாரும் தப்பா நினைக்க வேண்டாம்... சௌம்யாவோட முழு சம்மதம் இல்லாம அவளைக் கைப்பிடிக்கறது அவளுக்கு செய்யற துரோகம்... அது தப்பு... அதனாலதான் அவளோட மனநிலை முதலில் சரியாகணும்ன்னு சொல்றேன்... ஆனா அதுவரைக்கும் ஒரு நர்சுக்கு சமமா அவளையும் அவள் குழந்தையையும் பார்த்துக்க நான் தயாராய்த்தான் இருக்கேன்...''

''லாயர் ஸார்..! வாசு..! உங்க ரெண்டு பேர்க்குமே நாங்க நிறைய கடமைப்பட்டிருக்கோம்...''

அவர்கள் விடை பெற்றுச் சென்ற சில நிமிஷங்களில் ரிசப்ஷனிஸ்ட் இன்டர்காமில் கூப்பிட்டாள்.

''சொல்லும்மா...''

''இளங்கோ ஸார் வந்திருக்கார்...''

''வரச் சொல்லு...''

இன்டர்காம் ரிசீவரை வைத்துவிட்டு நிமிர்ந்தபோது - கதவின் கைப்பிடி கீழே இறங்கி திறந்த கதவில் இளங்கோ தோன்றினார்.

''வாங்க இளங்கோ... உக்கார்ங்க...''

எதிர் இருக்கையில் உட்கார்ந்து கொண்டே இளங்கோ சொன்னார்.

''நான் தோல்வியை ஒத்துக்கறேன் சிதம்பரநாதன்... இந்தாங்க...''

கார் சாவியை நீட்டினார்.

''என்ன இது...?''

''நாம பெட் கட்டின மாதிரி புத்தம்புது காரை உங்க ஆபீஸ் வாசலில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கேன்...''

''அந்தக் காரை நான் ஏத்துக்கப் போறதில்லை இளங்கோ...''

''ஏன்...?''

அவர் ஆச்சர்யமாய் நிமிர -

சிதம்பரநாதன் தொடர்ந்தார்.

''உண்மையில் கொலை செஞ்சது சௌம்யாதான்...''

''என்ன சொல்றீங்க...?''

''அது எனக்கு ஆரம்பத்திலேயே நல்லாத் தெரியும்... ஆனா சௌம்யா கொலை செஞ்சிருக்க மாட்டாள்னே நான் திரும்பத் திரும்ப சொல்லிட்டிருந்தேன்... சட்டத்தை ஏமாத்தித்தான் நான் சௌம்யாவை கொலைப் பழியிலிருந்து காப்பாத்தியிருக்கேன்...''

''எதனால அப்படி...?''

''இந்த கேஸ் என்னோட ஆத்ம திருப்திக்காகன்னு நான்தான் ஆரம்பத்திலேயே சொன்னேனே... சௌம்யா செஞ்ச கொலைகள் நியாயமானவைன்னு எனக்கு பட்டது... அவளுக்கு தண்டனை கிடைச்சா அது அநியாயம்னு நான் நினைச்சேன்... அதனாலே தர்மப்படி அவளைக் காப்பாத்தினேன்...''

இளங்கோ லேசான கோபத்தோடு அவரைப் பார்த்தார்.

''சௌம்யாவைக் காப்பாத்தினது சரியா தப்பான்னு நான் விவாதம் பண்ண விரும்பலை... ஆனா அதுக்காக வேற ஒரு அப்பாவிப் பொண்ணை நீங்க குற்றவாளியாக்கியிருக்கறது எந்த தர்மப்படி நியாயம்...?''

புன்னகைத்துக் கொண்டே சிதம்பரநாதன் சொன்னார்.

''உஷா முழு மனசோட இந்தத் தியாகத்துக்கு சம்மதிச்சிருக்கா... 'நான்தான் கொலை செஞ்சேன்'னு வலியப் போய் கோர்ட்டில் சொன்னா கோர்ட் நம்பாது...



துருவித் துருவி பார்க்கும்... அதனால தோழியைக் காப்பாத்தறதுக்காக நான் சொல்லிக் கொடுத்தபடி நாடகமாடி இன்ஸ்பெக்டரின் வலையில் போய்த் தானாகவே விழுந்திருக்கா... இப்போ ப்ராசிக்யூஷன் தரப்பில் அவளைக் கொண்டு போய்க் குற்றவாளியா நிறுத்துவாங்க... துருவிப் பார்க்க இடமில்லை...''

''ஒரு பெண்ணைக் காப்பாத்த இன்னொரு பெண்ணை பலியாக்கறதை நான் எந்த விதத்திலும் ஏத்துக்கமாட்டேன்... இதையெல்லாம் இப்பவே போலீஸில் சொல்லி...''

சிதம்பரநாதன் குறுக்கிட்டார்.

''நான் -முழுசா சொல்லி முடிக்கிற வரை அவசரப்படாதீங்க... உஷா இன்னும் சில நாட்களில் சாகப் போகிறவ...''

நிமிர்ந்தார் இளங்கோ.

''என்ன அவளுக்கு...?''

''எய்ட்ஸ்...''

''உஷா எய்ட்ஸ் பேஷண்ட்டா...?''

''ஆமா... கண்ட கண்ட பெண்களோட பழகினதில் அவளோட கணவன் எய்ட்ஸ் நோய் தாக்கி இறந்துட்டான்... கணவன் மூலமா உஷாவுக்கும் அந்தப் பயங்கர நோய் தொத்திகிச்சு... 'எப்படி இருந்தாலும் சாகத்தானே போறேன்... என்னோட தோழியைக் காப்பாத்திட்டு செத்தேன்னா நான் வாழ்ந்த கொஞ்ச நாள் வாழ்க்கையில் அர்த்தமிருக்கும்'ன்னு சொல்லி அவ மனப்பூர்வமாத்தான் இந்த தர்மப் போரில் தன் தலையைக் குடுத்திருக்கா... இப்ப சொல்லுங்க... போலீசுக்கு போன் போட்டு எல்லா உண்மையையும் சொல்லி சௌம்யாவை மறுபடி காட்டிக் கொடுக்கப் போறீங்களா...?''

இளங்கோ மௌனமானார்.

அதே விநாடி -

''ஙீ...''

''ஙீ...''

''ஙீ...''

போன் உச்ச ஸ்தாதியில் வீறிட ரிசீவரை எடுத்தார் சிதம்பரநாதன்.

பேசப் பேச அவர் முகம் இருண்டு போனது.

பேசி முடித்து ரிசீவரை வைத்த சிதம்பரநாதனைப் பார்த்துக் கேட்டார் இளங்கோ.

''எனிதிங் ராங்...?''

''போன், சப் ஜெயில்ல இருந்து...''

''என்ன விஷயம்...?''

''உஷாவை ஹாஸ்பிட்டலுக்கு கொண்டு போயிருக்காங்க...''

''என்னாச்சு...?''

''திடீர்னு வாந்தி எடுக்க ஆரம்பிச்சிட்டா... ரொம்ப சீரியஸாகி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்காங்க...''

''உஷாங்கற அந்தத் தியாகியை நான் ஒரு தடவை பார்க்கணும் சிதம்பரநாதன்...'' என்றார் இளங்கோ.

அடுத்த நிமிஷம் அந்த புத்தம்புது ஹாண்டாய் காரில் கவலையைச் சுமந்து கொண்டு சிதம்பரநாதனும், இளங்கோவும் நிரம்பியிருந்தார்கள்.

அவர்களைச் சுமந்த கார் கவர்மெண்ட் ஆஸ்பத்திரியை நோக்கி வேகமாய் சாலையில் வழுக்கிச் சென்றது.

**(முற்றும்)**

ஜீயே பப்ளிகேஷனுக்காக ஜீயே பப்ளிகேஷனில்
அச்சிட்டு (பிரஸ்) வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர்
ஜி. அசோகன். முகவரி: 6/352, திருவல்லிக்கேணி
நெடுஞ்சாலை, சென்னை - 5.
ஆசிரியர்: ஜி-அசோகன். தொலைபேசி: 8544294